பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00


சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 25 திங்கட்கிழமை (11-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:349

# நான்கு இடங்களில் இரவு - பகல் மீன்பிடித்துவருவதற்கு அனுமதி!









ஓமந்தையில் நேற்று அரசு - புலிகள் பிரதிநிதிகளின் சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## உபகுழு நேற்று ஓமந்தையில் கூடித் தீர்மானம்
## மாவட்டங்கள் தோறும் கூட்டம் நடத்தவும் முடிவு

வவுனியா,நவம்பர் 11

பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மீள்குடியமர்வு சம்பந்தமான உபகுழு நேற்று முதல்முறையாக ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் கூடியது. முதற்படியாக வடக்கில் புங்குடுதீவு, நெடுந்தீவு, காரைநகர், மாதகல் ஆகிய நான்கு பகுதிகளில் உள்ள எட்டுத்துறைகளிலிருந்து மீனவர்கள் இரவு - பகல் 24மணி நேரமும் கடலுக்குச் சென்று எந்த நேரத்திலும் கரை திரும்ப அனுமதிப்பது என்று கொள்கையளவில் முடிவுசெய்யப்பட்டது.

மாவட்டங்கள் தோறும் உப குழுவின் உப கூட்டங்களை நடத்துவது என்றும் நேற்றுத்தீர்மானிக்கப்பட்டது. உபகுழுவின் முதலாவது உபகூட்டம் நாளைமறுதினம் முகமாலையில் நடைபெறும். அந்தக் கூட்டத்தில் நான்கு இடங்களில் 24 மணிநேர மீன்பிடிக்கு அனுமதிப்பதுபற்றிய தீர்மானத்தை உறுதி செய்வது என்றும் முடிவாகியது.

மாவட்டங்களில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக, இந்த உபகுழுவுக்கு மாவட்டங்கள் தோறும் உபகுழுக்களை அமைக்க நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அந்தந்த மாவட்டங்களில் இயங்கும் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து, மாவட்ட மட்டத்தில் உள்ள இராணுவ, புலிகளின் தளபதிகள் மற்றும் புலிகளின் அரசியல் பொறுப்பா

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டிலிருந்து அரும்பொருள்கள் விமானத்திலும் கடத்தப்படுகின்றன?

யாழ்ப்பாணம்,நவ.11

குடாநாட்டிலிருந்து அரும்பொருள்களை வெளியே எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் வேறுவழிகளில் இப்பொருள்கள தென்பகுதிக்குத் தொடர்ந்தும் கடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இங்கிருந்து விமானம் மூலம் அரும்பொருள்கள் தெற்கே எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன என்ற தகவல் தங்களுக்குத் தெரியவந்திருப்பதாக அரும்பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆர்வலர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நகரில் வண்ணார்பண்ணை பிரதே

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் லொஹானுக்கு சேவை நீடிப்பு வழங்க சிபாரிசு

### ஜனாதிபதியே இறுதி முடிவு செய்வார்

கொழும்பு,நவ.11

எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம் திகதி ஓய்வு பெறவேண்டிய மேஜர் ஜெனரல லொஹான் குணவர்த்தனவுக்கு மேலும ஒரு வருட சேவை நீடிப்பு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

மேஜர் ஜெனரல் குணவர்த்தனவுக்கு ஓராண்டு சேவை நீடிப்பு வழங்குமாறு கோரி, இராணுவத் தளபதியின சிபாரிசுடனான பத்திரங்கள், கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஆம் திகதி ஜே.வி.பி. தேசிய மாநாடு

கொழும்பு,நவ.11

ஜே.வி.பியின் நான்காவது தேசிய வருடாந்த மாநாடு நாளைமறுநாள் 13 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும்.

இம்மாநாட்டில் நேபாள எதிர்க்கட்சித் தலைவர் குமார் மாதவ் உட்பட வெளிநாட்டு பிரதிநிதிகள் பலர் கலந்துகொள்வர் என்று ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார். (ஐ-9)

### ஈ.பி.டி.பி. உறுப்பினரின் பிரேத பரிசோதனை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,நவ.11

அனலைதீவுப் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் புஸ்பராசாவின் (யோகராசா மைக்கல்) பிரேத பரிசோதனை யாழ்.ஆஸ்பத்திரியில் இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மருத்துவர் சங்கத் தலைவர் சமரசிங்க இல்லம் மீது குண்டுவீச்சு!

### எவரும் காயமடையவில்லை; இல்லம் சேதம்!

கொழும்பு,நவ.11

இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் எச்.எக்.ஆர்.சமரசிங்கவின் இல்லம்மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோர் கைக்குண்டு ஒன்றை எறிந்துள்ளனர். தர்மபால மாவத்தையில் உள்ள அவரது இல்லம்மீது இரவு 11 மணியளவில் கைக்குண்டு எறியப்பட்டிருக்கிறது.

கைக்குண்டு எறியப்பட்டதில் வீட்டுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆயி

(14ஆம் பக்கம் பார்க்க)

## அதாவுல்லா குழுவினர் சபையில் தனித்து இருப்பர்

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் 7 பேரும் இன்று நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி இருப்பர்.

இவர்களில் பிரதி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவும் அவரின் ஆதரவாளர்களும் சபையில் தனியாக இருந்து தனிக் குழுவாக இயங்குவர். என்றாலும் அரசாங்கத்தை ஆதரிப்பர். ஏனைய எம்.பிக்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பர் என்று தெரியவருகிறது. (ஐ)

## சீனக்குடாவில் மீன்பிடிக்க கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு,நவ.11

சீனக்குடாவில் விமானப்படை முகாமின் அருகிலுள்ள கடற்பகுதிகளில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 4 வருடங்களாக விமானப்படை முகாம் அருகில் உள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில் நேற்று சூரன்போர் உற்சவம் நடைபெற்றது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலும் பெரும் திரளான பக்தர்கள் சூரன்போர் காட்சி காணத்திரண்டிருந்தனர். அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை. முருகப் பெருமானின் பக்தர்கள் பாரம்பரிய முறைப்படி முடிதரித்து வீரவாகு தேவர் சேனையாக வலம் வந்தனர். அவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள்:அற்புதன்)

### கண் சிகிச்சை முகாம் நடத்துவதற்காக

# தாய்வான் அமைச்சர் தலைமையில் மருத்துவ நிபுணர் குழு இன்று வருகை

தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் தலைமையில் அந்நாட்டின பிரபல மருத்துவமனைகளைச் சேர்ந்த கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை யாழ்.வருகின்றது.

இக்குழுவினர் இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பெரிய அளவிலான கண் சத்திர சிகிச்சை முகாம் ஒன்றினை யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தவுள்ளனர்.

தாய்வான் தலைநகர் தாய்பேய் றோட்டறிக் கழகத்தின் ஆளுநர் ஜோசப்பின் வொங் தலைமையிலான றோட்டேரியன்களும் இக்குழுவில் இடம்பெறுகின்றனர். தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ ரி சூயு (Shu-Ti Chiou) இந்த மருத்துவக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்.

கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகத்தின் தலைவர் பேர்னி டோல், கண்டி மெற்றோ பொலிரன் றோட்டறிக் கழகத்தின் தலைவர் சிவசுப்பிரமணியம் ஆகியோரும் இக்குழுவினருடன் வருகின்றனர்.

சுகாதார அமைச்சர் தலைமையிலான மருத்துவக் குழுவினரை யாழ். றோட்டறிக் கழக உறுப்பினர்கள் வரவேற்கவுள்ளனர். வரவேற்பு வைபவம் இன்று காலை 8.30 மணிக்கு 'உதயன்' அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்குழுவினர் இன்று மாலை 4.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கும் சென்று அங்குள்ள வசதிகளைப் பார்வையிடுவர். அங்குள்ள நோயாளிகளின் தேவைகள் குறித்து மருத்துவமனை நிர்வாகிகளுடன் கலந்துரையாடுவர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இக்குழுவினர் மேற்கொள்ளவிருக்கும் கண்சத்திர சிகிச்சை மூலம் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பொது மக்கள் பயனடையவுள்ளனர். (ஐ)

# கல்வியியற் கல்லூரியில் 2 ஆம் கட்ட நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2003 ஆம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை மேற்படி மூன்று கல்வியியற் கல்லூரிகளிலும் எதிர்வரும் 16 ஆம் திகதி ஒரே சமயத்தில் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கபட்ட மாணவர்களுக்கு கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை (கல்முனை) மாவட்ட மாணவர்களுக்கு மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியிலும -

வவுனியா, திருகோணமலை (சிலாபம், புத்தளம்), கொழும்பு, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும -

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கலலூரியிலும் -

நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

மாணவர்கள் வசதி கருதி தேவையேற்படின் தகுந்த காரணத்தைத் தெரிவித்து ஏதாவது ஒரு கல்லூரியில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் -

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

முதலாம் கட்ட நேர்முகப் பரீட்சை கடந்தமாதம் 15 ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதிவரை நடைபெற்றது. காலதாமதமாகக் கடிதம் கிடைத்தமை போன்ற காரணங்களால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்களும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு உரிய ஆவணங்களுடன் தோற்றமுடியும்.

கிறிஸ்தவ பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்கள் தேசிய மட்டச் சான்றிதழ் இருந்தால் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும். இவர்களுக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் மட்டுமே நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

(ஐ-ரி)

# இளைஞர்சேனை ஜனவரியில் இயங்கும்; முதலில் 40 ஆயிரம் பேர் திரட்டப்படுவர்!

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் திட்டங்களில் ஒன்றான இளைஞர் சேனை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் செயறபடத் தொடங்கும் ஆரம்பத்தில் நாற்பதாயிரம் இளைஞர்கள் இந்தச் சேனைக்குத் திரட்டப்படுவர்.

நாட்டின் சகல பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் இருந்து தலா 250 பேர் வீதம் இளைஞர், யுவதிகள திரட்டப்படுவர். 18 முதல் 28 வயது வரையிலான இவர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் இரண்டாயிரம் ரூபா மாதமொன்றிற்கு வழங்கப்படும்.

இந்த இளைஞர் சேனைக்காக வரவு - செலவுத் திட்டத்தில் 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இளைஞர்களின் திறமையை வளர்த்து நாட்டுக்குப் பயனுள்ள ஒரு சேனையை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று அரசு கூறுகிறது.

தெரிவு செய்யப்படும் இளைஞர்களுக்கு ஆங்கிலமொழி, கணனி, தகவல்தொழில்நுட்பம், தலைமைத்துவம் ஆகிய துறைகளில் ஆறுவார கால பயிற்சியளிக்கப்படும்.

(ஐ)

### சந்திரிகா பதவியேற்று எட்டு ஆண்டுகள்:

# ஜனாதிபதி செயலகம் எதிரே நாளை அரச வைபவம் ஆரம்பமாகும்

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி பதவியேற்று எட்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடத்தப்படும் அரச வைபவம் நாளை நடைபெறும். ஜனாதிபதி செயலகம் எதிரே காலை 10.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், எம்பிக்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்துகொள்வர்.

மறுநாள் 13 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று வழிபடுவார்.

இன்று காலை 9மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் சர்வசமய நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். (ஐ-9)

### ஜயவர்த்தனபுர மாணவர் மோதல் தொடர்பாக

# களனி, அநுராதபுரம், ஹக்மன பகுதிகளில் 13 பல்கலைக்கழக மாணவர்கள் கைது!

கொழும்பு,நவ.11

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதல் தொடர்பாக 13 மாணவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். களனி, அநுராதபுரம், ஹக்மன ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை களனி பல்கலைக்கழக மாணவர் விடுதியை முற்றுகையிட்ட விசேட பொலீஸ் குழுக்கள் அங்கிருந்த ஏழு மாணவர்களைக் கைது செய்தன. கைது செய்யப்பட்ட இவர்களில் நால்வர் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தையும் மூவர் றுகுணு பல்கலைக்கழகத்தையும் சேர்ந்தவர்களாவர்.

ஏனைய ஆறு மாணவர்களும் அநுராதபுரம், ஹக்மன ஆகிய பகுதிகளில் இருந்து கைது செய்யப்பட்டனர்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாழனன்று இடம்பெற்ற மோதலில் பலத்த காயமடைந்த ஆறு மாணவர்களில் ஒருவர் சனிக்கிழமை அதிகாலை மரணமானார். இவரது இறுதிக் கிரியைகள் புதனன்று நடைபெறும்.

இம்மோதல் தொடர்பான விசாரணைகளுக்கு குற்றத்தடுப்பு பொலீஸாரினதும் ஒத்துழைப்பும் பெறப்பட்டிருக்கிறது என்று பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்திருக்கிறார். (ஐ-9)

# வெளியார் எவரும் சம்பந்தப்படவில்லை

### பொலீஸ் தலைமை அலுவலகம் அறிவிப்பு

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் வெளியார் எவரும் சம்பந்தப்படவில்லை என்று பொலீஸ் தலைமை அலுவலகம் தெரிவிக்கின்றது.

இச்சம்பவம் தொடர்பாக அறிக்கை விடுத்திருக்கும் பொலீஸ் தலைமையகம், கைது செய்யப்பட்டிருக்கும் மாணவர்களைவிட மேலும் பெருந்தொகையான சந்தேகநபர்கள் கைது செய்யப்படவிருக்கின்றனர் எனவும், இச்சந்தேக நபர்கள் ஜே.வி.பியுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் பல்கலைக்கழக மாணவர்கள் எனவும் தெரிவித்திருக்கிறது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவன் நுகேகொடை, கங்கொடவிலையைச்சேர்ந்த ஒவிட்டிகல விதானகே சமந்த எனவும் பொலீஸ் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

### மாவீரர்தினம் பற்றியகூட்டம்

கைதடி,நவ.11

மாவீரர்தின நிகழ்வுகள் பற்றிய கூட்டம் ஒன்று இன்று மாலை 6 மணிக்கு கைதடி அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கைதடிப்பகுதி சனசமூக நிலையங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களையும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஸ்ரீநாத் கேட்டுள்ளார். (எ-75)

# நியூஸிலாந்து தபால் நிறுவனத்திடம் தபால் திணைக்கள நிர்வாகம்?

கொழும்பு,நவ.11

தபால் திணைக்களத்தை பொது நிறுவனமாக மாற்றியமைத்து அதன் நிர்வாகத்தை நியூஸிலாந்து தபால் நிறுவனம் ஒன்றுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறியப்படுகிறது. தபால் திணைக்களம் பொது நிறுவனமானாலும் அதன் உரிமை அரசாங்கத்திடமே தொடர்ந்து இருந்து வரும்.

இது தொடர்பாகப் பேச்சு நடத்த நியூஸிலாந்து தபால் நிறுவனத்தின் இரு உயர் அதிகாரிகள் இலங்கை வந்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

உலகின் சுமார் 40 நாடுகளில் தபால் சேவை நிர்வாகம் அந்த நியூஸிலாந்து நிறுவனத்திடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை தபால் திணைக்களம் எவ்வாறு தனியார் மயப்படுத்தப்படவேண்டும் என்பது குறித்து நியூஸிலாந்து நிறுவனம் விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து கையளித்திருப்பதாகவும் தெரிகிறது. அரச சேவைகளென இலவசமாக வழங்கப்படும் தபால் சேவையை ஒழிப்பது ஒரு முக்கிய யோசனையாக அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

தபால் திணைக்களம் கடந்த பத்து ஆண்டுகளில் சுமார் 500 கோடி ரூபா நஷ்டமடைந்திருக்கிறது. நாடு பூராகவும் பிரதான தபால் நிலையங்கள், உப தபால் நிலையங்கள் என 4 ஆயிரத்து 49 தபால் நிலையங்கள் இயங்கி வருகின்றன. (ஐ)

### அமெச்சூர் சங்க அ.அட்டைகளை பெறலாம்

யாழ்ப்பாணம்,நவ.11

அமெச்சூர் மெய்வண்மைச் சங்கத்தால் நடத்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் அடையாள அட்டைகள உரியவர்களுக்கு வழங்கப்படஉள்ளன. அதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருணஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்' நிறுவனத்தில் தொடர்புகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

(2002 - 2003 இற்கான ஐ.ஏ.ஏ.எவ். (IAAF) கையேடுகளையும் அங்கே பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### மொழிவிருத்தி மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட இருபது பாடசாலைகளில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் மொழி விருத்தி செயற்றிறன் இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை சாவகச்சேரி, பளை, கொடிகாமம் கோட்ட கல்வி அலுவலகங்களிலும், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-517)

# குருநகர் மீனவர் மத்தியில் 'றோலர்' பயன்பாடு அதிகரிப்பு

அரியாலை,நவ.11

குருநகர் பகுதி மீனவர்கள் றோலர் பயன்படுத்தி மீன் பிடித்தலை அதிகரித்துள்ளனர்.

முதலில் ஒரு றோலர் மூலம் சென்று மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் தற்போது ஐந்துக்கும் அதிகமான றோலர்களை பயன்படுத்தி மீன்பிடியை மேற்கொள்கின்றனர்.

றோலரைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதனால் தம்மால் சந்தை வாய்ப்பை அதிகரிக்கக் கூடியதாக இருப்பதாகக் கடற்றொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## இலங்கை வாலிபர் உட்பட

# புளொட்டிடம் பயிற்சி பெற்றவர்கள் பெங்களூர் நகரில் கைதாகினர்!

பெங்களூர்,நவ.11

பயங்கர வெடிபொருள்கள், டெட்டனேட்டர்களுடன் 5 தமிழ்த் தீவிரவாதிகள் இந்தியாவின் பெங்களூரில் கைதுசெய்யப்பட்டனர்.

பிரேசர் நகர்ப் பகுதியில் சந்தேகப்படும்படி நடமாடிய 2பேரைப் பிடித்து பொலீஸார் விசாரித்தனர். அவர்களது பெயர் விஜயகுமார், சிவகுமார் என்று தெரியவந்தது. அவர்களின் பையில் குழாய் வெடிகுண்டு உள்ளிட்ட பல வெடிபொருள்கள் இருப்பது தெரியவந்தது. விஜயகுமார் இலங்கையர் என்று கூறப்படுகிறது.

அவர்களது வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. 5 பெட்டிகளில் நாட்டுத் துப்பாக்கிகள், கிரேனேட் வெடிபொருள்கள், ஜெலட்டின் குச்சிகள், வேதிப் பொருள்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் குமார், ரவி, ஸ்ரீநிவாசன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்தும் ஏராளமான வெடிபொருள்கள், துப்பாக்கிகள், குழாய் வெடி குண்டுகள், கைஎறி குண்டுகள், வேதிப் பொருள்களைப் பொலீஸார் கைப்பற்றினர்.

விஜயகுமார், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரிடம் (புளொட்) வெடிகுண்டு மற்றும் துப்பாக்கித் தயாரிப்புப் பயிற்சி பெற்றவர் என்பது தெரியவந்துள்ளது. 1985ஆம் ஆண்டில் விஜயகுமார் 'புளொட்' அமைப்பினரிடம் பயிற்சி பெற்றுள்ளார். விஜயகுமார் மற்ற 4 பேருக்கும் துப்பாக்கித் தயாரிப்பு, வெடிகுண்டு தயாரிப்புப் பயிற்சிகளை அளித்து வந்ததாகத் தெரிகிறது.



விஜயகுமார் சிவகுமார்

இவர்களுக்கும் வேறு தீவிரவாத அமைப்புகளுக்கும் தொடர்பு உள்ளதா? என்று பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

பெங்களூரில் வெடிகுண்டுகளை வீசி நாசவேலையில் ஈடுபட இவர்கள் திட்டமிட்டிருந்ததாகத் தெரிகிறது. விஜயகுமார், மகாதேவப் புராவிலுள்ள பிரசிஷென் ரெலிகொம் நிறுவனத்தின் பராமரிப்புப் பொறியியலாளராக வேலை பார்த்து வந்தார். சிவகுமார் ஓவியராக இருந்தார். குமார் மரவேலை பார்த்தார். ஸ்ரீநிவாசன் வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழில் செய்து வந்தார். ரவி, ஸ்ரீநிவாசன் இருவரும் உறவினர்கள்.

இவர்களிடமிருந்து ஆயிரத்து 200 எலக்ட்ரிக் டெட்டனேட்டர்கள், 970 சாதாரண டெட்டனேட்டர்கள், 10 மீற்றர் நீள சேஃப்டி பியூஸ், 2 கிலோ அமோனியம் நைட்ரேட், 2 எறிகுண்டுகள், 500 கிராம் பொட்டாசியம் நைட்ரேட், 13 குழாய் வெடிகுண்டுகள், 9 கைக்குண்டுகள், துப்பாக்கிக் குண்டுகள் உள்ளிட்ட பல் வேறு வெடிபொருள்களைப் பொலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.(ஒ)

## முரசொலி மாறனுக்கு அமெரிக்காவில் சிகிச்சை



இந்திய மத்திய அமைச்சர் முரசொலி மாறனுக்கு (வயது 68) அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் மருத்துவமனையில் சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. லேசாகக் கண் திறந்து பார்க்கும் நிலையில் உள்ள அவர், இரண்டு தினங்களில் அமெரிக்கா செல்கிறார்.

கடந்த ஒன்றரை மாத காலமாக சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மாறனை அப்படியே அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வசதியாக அனைத்து மருத்துவ வசதிகளையும் உள்ளடக்கிய மருத்துவ அம்புலன்ஸ் விமானம் சிங்கப்பூரிலிருந்து வருகிறது. நாளை அல்லது நாளைமறுதினம் அம்புலன்ஸ் விமானத்தில் அவர் அமெரிக்காவுக்குச் செல்வார் என அப்பலோ மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. மேற்படி விமானத்தின் வாடகைக் கட்டணம் ஒரு மணித்தியாலத்துக்கு 2லட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டார் நாட்டு மன்னரின் தங்கை அமைச்சரானார்

டோகா,நவ.11

அரபு நாடுகளில் ஒன்று கட்டார். அந்த நாட்டு மன்னராக ஹமாத பின் கலிபா அல்தானி இருக்கிறார். அவர் தன் தங்கை ஹசாபின்ட் கலிபாவை அமைச்சர் பதவியில் நியமித்திருக்கிறார். குடும்ப விவகாரங்களுக்கான பொறுப்புக்களை அவர் கவனிப்பார்.

அரபு நாடுகளில் ஒரு பெண் அமைச்சராக நியமிக்கப்படுவது இதுதான் முதல் தடவை என்று கூறப்படுகிறது. கட்டார் நாட்டில் 1990ஆம் ஆண்டுதான் முதற்றடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. (ஒ)

# காஸாவில் குண்டு வெடிப்பு; இஸ்ரேலிய வீரர் உயிரிழப்பு!

லண்டன்,நவ.11

காஸாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இஸ்ரேலிய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

நெட்ஜரீம் என்ற யூதக்குடியிருப்பு அருகே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. பலஸ்தீனத் தீவிரவாதக் குழுவான இஸ்லாமிக் ஜிகாத் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

மேற்குக்கரையின் ஜெனின் நகரில் மூத்த பலஸ்தீனத் தலைவர்களில் ஒருவரான இயத்சவால்ஹா (வயது 32) என்பவர் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இத் தாக்குதலை நடத்தியதாக இஸ்லாமிக் ஜிகாத் தெரிவித்தது.


குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதி

காஸா பகுதியில் வழக்கமான கண்காணிப்புப் பணியில் நேற்று இஸ்ரேலியப் படையினர் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகவும் - அப்போது அவர்கள் சென்றுகொண்டிருந்த வாகனம் கண்ணிவெடியில் சிக்கியதிலேயே இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் சவால்ஹா கொல்லப்பட்ட சம்பவம் இஸ்ரேலின் மற்றொரு குற்றச்செயல் என்று பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

ஈராக் விவகாரத்தில் கைக்கொள்ளும் அதே அடிப்படையில் அரபு - இஸ்ரேல் பிரச்சினையையும் ஐ.நா. கைக்கொள்ளவேண்டும் என்றார் அரபாத்.

சவால்ஹா மற்றும் இஸ்ரேலிய வீரர் ஆகியோர் அடுத்தடுத்து உயிரிழந்திருப்பது ஏற்கனவே சிக்கலாகியுள்ள மேற்காசியப் பிரச்சினையை மேலும் இறுக்கமாக்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க எகிப்தியத் தலைநகர் கெய்ரோவில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் பதாஹ் இயக்கம் பிற இஸ்லாமியத் தீவிரவாத இயக்கங்களுடன், மேற்காசியாவில் பதற்றத்தைத் தணிக்கத் தற்கொலைத் தாக்குதல்களை நிறுத்திக் கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகிறது.

சவால்ஹாவின் படுகொலை இந்தப் பேச்சு சுமுகமாக நடப்பதைச் சீர்குலைக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. (ஒ)

# தீவிரவாதிகளை அடியோடு ஒடுக்க எங்கும் தாக்குதல் நடத்துவோம்!

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்ரன்,நவ.11

'தீவிரவாதிகள் எங்கிருந்தாலும் தேடிச் சென்று தாக்குவோம்; சம்பந்தப்பட்ட நாடுகள் ஒப்புதல் தராவிட்டாலும் அதைப் பற்றி கவலைப்படாது தாக்குதலை நடத்தியே தீருவோம்' என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதேசமயத்தில், அல்கெய்டா தீவிரவாதிகளை ஒடுக்க முன்வரும் நாடுகளுடன் இணைந்து செயற்பட எப்போதும் தயாராக இருப்பதாகவும் அமெரிக்க இராணுவத் தலைமையகப் பத்திரிகைத் தொடர்பாளர் விக்டோரியா கிளார்க் கூறினார்.

ஏமன் நாட்டில் கடந்த வாரம் அல்கெய்டாவினர் என்று சந்தேகிக்கப்படும் 6 பேர் சென்ற வாகனம் மீது அமெரிக்க உளவு விமானம் ஏவுகணை வீசித் தாக்கியது. இதில் இறந்தவர்களில் அல்கெய்டா மூத்த உறுப்பினர் ஒருவரும் அடங்குவார். 2000 ஆம் ஆண்டில் ஏமன் நாட்டில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் தாக்குதலுக்குள்ளானது. இதற்கு சதித்திட்டம் தீட்டியதே இவர்தான் என்று அமெரிக்கா கூறுகிறது. (ஒ)

# ஆப்கான் உள்ளூர் மோதலில் அமெரிக்கப்படை தலையீடு!

காபூல்,நவ.11

ஆப்கானிஸ்தானில் அரசுப்படைகளுக்கும் அரசியல் செல்வாக்குப் பெற்ற இனக்குழுக்களுக்கும் இடையேயான மோதலில் அமெரிக்கப் படையினர் முதற்றடவையாக தலையிட்டுள்ளனர்.

ஆப்கானில் பழங்குடி இனத்தவரிடையே அரசியல் செல்வாக்குக் குறித்து மோதல்கள் இடம்பெறுவது வழக்கம். அத்துடன் ஆப்கான் படையினருடனும் அந்த ஆயுதக்குழுக்கள் மோதிவருகின்றன.

இந்த நிலையில் அரசுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து குஷிஷ் இனத்தவரை வெளியேற்ற அரசுப் படைகள் வெளியேற்ற முனைந்தன.

இதனைத் தொடர்ந்து அரசுப் படைக்கும் குஷிஷ் இன ஆயுததாரிகளுக்கும் இடையே மோதல் வெடித்தது.

இயந்திரத்துப்பாக்கிகள், ரொக்கெட்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி இரு தரப்பினரும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தினர். கோஸ்ட் நகரிலிருந்து ஒரு கிலோமீற்றர் தென் கிழக்கே உள்ள கிகாரா கிராமப் பகுதியில் இந்த மோதல் இடம்பெற்றது.

மோதல் நடந்த இடத்துக்கு விரைந்த அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் குஷிஷ் ஆயுததாரிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தின.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற மோதல், இதனையடுத்து முடிவுக்கு வந்தது. இந்த மோதலில் 6 ஆயுததாரிகளும் இரு அரசப்படையினரும் காயமடைந்தனர்.

அல்கெய்டா மற்றும் தலிபான்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைக்காக சுமார் 8 ஆயிரம் அமெரிக்கப்படையினர் ஆப்கானில் நிலைகொண்டுள்ளனர். அவர்கள் ஆப்கானின் உள்ளூர் மோதல்களில் தலையிடாமல் இருந்துவந்தனர். தற்போதுதான் அமெரிக்கப்படையினர் ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் உள்ளூர் மோதல் ஒன்றில் முதற்றடவையாக தலையிட்டுள்ளனர்.

அரசுப்படைகள் கேட்டதால் அமெரிக்க இராணுவம் தலையிட்டதா அல்லது தன்னிச்சையாக முடிவெடுக்கப்பட்டதா என்பது தெரியவரவில்லை. (ஒ)


ஆப்கானில் அமெரிக்கப் படையினர்

# சவூதிஅரேபிய நகைக்கடைகளில் வெளிநாட்டவர் பணியாற்ற தடை!

## ஆயிரக்கணக்கானோர் வேலையிழக்கும் அபாயம்

துபாய்,நவ.11

சவூதி அரேபியாவில் நகைக் கடைகளில் வெளிநாட்டினர் பணியாற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள வெளிநாட்டவர் பலரும் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் 60 லட்சம் வெளிநாட்டினர் தங்கி வேலைப் பார்த்து வருகின்றனர். இதனால் உள்ளூர் மக்களுக்கு வேலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. சவூதி அரேபியாவைச் சேர்ந்த 32 லட்சம் பேர் வேலை இல்லாமல் இருப்பது சமீபத்தில் நடந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதைத் தொடர்ந்து உள்ளூர் மக்களுக்கு வேலை அளிக்கும் பொருட்டு வெளிநாட்டைச் சேர்ந்தோர் வாடகைக் கார் சாரதியாகப் பணியாற்ற தடைவிதிக்கப்பட்டது. கடந்த மாதம் அரசு பிறப்பித்த இந்த உத்தரவை 6 மாதத்துக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும். இதனால் 50ஆயிரம் வெளிநாட்டினர் வேலை இழக்க நேரிடும்.

இந்நிலையில், நகைக்கடைகளில் வெளிநாட்டினர் வேலை பார்க்க சவூதி அரசு தடை விதித்துள்ளது. நகைக் கடைகளில் சவூதியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் வேலை கொடுக்க வேண்டும் என்றும், இதை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

அந்நாட்டில் உள்ள ஆயிரத்து 100 நகைக்கடைகளில் மூவாயிரத்து 500 வெளிநாட்டினர் வேலை பார்க்கின்றனர். அத்தோடு ஜெட்டாவில் உள்ள 350 நகை தயாரிப்புக் கூடங்களில் வெளிநாட்டினர் 10 ஆயிரம் பேர் வேலை பார்த்து வருகின்றனர். அரசின் உத்தரவு காரணமாக இவர்கள் வேலை இழக்கிறார்கள். (ஒ)

PRESIDENT ®



CFL

பல்புகள், சர்வதேச அங்கீகாரம் பெற்ற
80% மின்சார சேமிப்பை 1 வருட
உத்தரவாதத்துடன் வழங்குகின்றது

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

CEB இன் அங்கீகாரம் பெற்று
இலகு தவணை முறையில் கிடைக்கின்றது.

ISO 9002

JAFFNA ELECTRICALS
No. 06, Stanley Road, Jaffna.


# இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் வெள்ளிவிழா நிகழ்வு

சாவகச்சேரி,நவ.11

இலங்கை வங்கியின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இலங்கை வங்கியின் சாவகச்சேரிப் பணிமனையில் கிளை முகாமையாளர் க.தவயோகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர், கே.பாலசுப்பிரமணிம், யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.நடராசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-31)

# 2, 888 குடும்பங்கள் மீளக்குடியமரவில்லை

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் இன்னமும் 2 ஆயிரத்து 888 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 851 பேர் தமது சொந்த இடங்களில் மீளக்குமடியமரவில்லை என பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1999ஆம் ஆண்டுப் பதிவுகளின் பிரகாரம் பிரதேசத்தில் 19 ஆயிரத்து 673 குடும்பங்களைச் சேர்ந்த 72ஆயிரத்து 71பேர் வசித்ததாகவும் - இடம்பெயர்வின் பின்னர் கடந்த ஒக்ரோபர் 31ஆம் திகதிவரை 16ஆயிரதது 785 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 480பேர் சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# வீடுகள் அமைக்க கியூடெக் திட்டம்

சாவகச்சேரி,நவ.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு கியூடெக் நிறுவனம் வீடுகள் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இத்திட்டத்திற்குத் தகுதியான குடும்பங்களைத் தெரிவுசெய்வதில் கியூடெக் அமைப்பின் ஊக்குவிப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அமைப்பின்மூலம் தென்மராட்சிப் பிரதேசத்தில் நாவற்குழி, மட்டுவில், மிருசுவில், கச்சாய் ஆகிய கிராமங்களில் வீடுகள் அமைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-31)

# குளவிகள் கொட்டி யுவதி ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,நவ.11


பனையில் இருந்து விழுந்த காவோலையை இழுத்தெடுத்தபோது, அதில் மறைந்திருந்த குளவிகள் (சுமார் 50வரை) ஓலையை எடுத்தவரைக் கொட்டித் தாக்கின.

துன்னாலை கிழக்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கதிர்வேற்பிள்ளை அனுஷியா (வயது25) என்பவரே குளவிகளால் கொட்டப்பட்டவராவார். இவர் உடல் வீக்கமடைந்த நிலையில் மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

# சாவகச்சேரிக்கு புதிய பங்குதந்தை

தென்மராட்சி,நவ.11

சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தையாக அருட்திரு.ரவிச்சந்திரன் அடிகள் யாழ்.மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)


முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM441240

Access Graphics

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324241-5, 337283-5
பெக்ஸ்: 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.சின்னையா நித்தியானந்தராஜா
*(B.B.A. Dip. in Ed.)*

அவர்கள் 13.10.2002 அன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழாவில் **Dip.in Ed.** பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி மகிழ்வதோடு, மேலும் பல சிறப்புக்களைப் பெற எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*யா/யாழ்ற்ரன் கல்லூரி,*
*காரைநகர்.* (10404) அதிபர், ஆசிரியர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பூவுலகு 06 - 01 - 1932
வானுலகு 12 - 10 - 2002

அமரர் வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம்
(ஓய்வுபெற்ற பஸ் நடத்துநர் - பருத்தித்துறை)

*ஐயா!*
*பற்றெல்லாமறுத்து நீங்கள் சிவலோகம் சேர்ந்தாலும்*
*நித்தியமும் உமை நினைந்து நைந்துருகி வாடுகிறோம்*
*வாடாது எமையெல்லாம் அன்புடனே காத்து நின்றீர்*
*வாடவிட்டு எங்கு சென்றீர் ஆறாது எம் துயரம்.*

எமது குடும்பத் தெய்வம் இறைவனடி சேர்ந்தவேளை சகல வழிகளிலும் எம் துயரில் பங்குகொண்டோருக்கு இதயத்தால் நன்றி கூறுகின்றோம். இன்று (11.11.2002) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*அன்னாரின் ஆத்மசாந்திக்காக கிழவித்தோட்ட விநாயகரை வேண்டும்:*

*கவுந்தில்,*
*கரவெட்டி மத்தி, கரவெட்டி.* (10422) - குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 - 07 - 1937
மறைவு 28 - 10 - 1998

அமரர் கலாநிதி சின்னத்தம்பி கதிர்காமத்தையா

திதி: 11-11-2002

*ஆண்டு நான்கும் ஆயிற்றோ அந்தோ உமைப்பிரிந்து*
*ஈண்டு உமை நினைந்தே இங்கு நாம் வாழ்கின்றோம் - நீர்*
*கதிர்காமத்தையனின் கழலிணைகளிற் கலந்தீரோ?*
*விதி செய்த சதியாலே கலங்கியழுகின்றோம் கண்ணீருகுத்தே!*
*எப்போதும் உம்முகந்தான் எம்முன்னே தெரியுதையா!*
*தப்பாமல் ஒருமுறை திருமுகந்தான் காட்டீரோ?*

ஓம் சாந்தி!

*96, முதலாம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (10429)
மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள்.


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவிப்பல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும்*
*குணப்படுத்துபவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி இல: 222 2450* (10473)



## நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்

சாவகச்சேரி

மேற்படி எமது ஸ்தாபனம், சாவகச்சேரி, கண்டி வீதியில் *(அம்பிகா மருந்தகம் முன்பாக)* இன்று (11.11.2002) திங்கட்கிழமை தொடக்கம் மீளவும் செயற்படுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

(10460) உரிமையாளரும், ஊழியர்களும்.


அளப்பரிய சேவையை அகமகிழ்ந்து

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று வெள்ளிவிழாக்காணும் யாழ்ப்பாணம், இலங்கை வங்கி இரண்டாம் கிளை எமது வர்த்தக சமூகத்திற்கு இது வரை செய்துவந்த அளப்பரிய சேவையை நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றோம்.

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (C/24813) யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்

அழுக்குத் துணிகளைக் கழுவுதல் - ஆண்டு 2003

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கேள்விச் சபைத் தலைவரால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 2003ஆம் ஆண்டுக்கான அழுக்குத்துணிகளைக் கழுவுவதற்கான சீலிடப்பட்ட கேள்விகள் கோரல்.

1. பிரதேச செயலரிடமிருந்து பெறப்பட்ட பொது 170 படிவத்தில் சொத்துச் சான்றிதழ் மற்றும் ரூபா 500 ஐ மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக வைத்தியசாலை பணிப்பாளர் கணக்காளர் அலுவலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பொது 172 பற்றுச் சீட்டுடன் தமது அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2002-11-20 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கேள்விப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விகள் அடங்கிய தபால்கள் சீலிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் 2003ஆம் ஆண்டிற்கு அழுக்குத் துணிகளைக் கழுவுதல் எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21-11-2002 முற்பகல் 10 மணி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக தபால் மூலமோ, நேரடியாகவோ இப்பணிமனைக் கேள்விப் பெட்டியில் இடலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அதே இடத்தில் கேள்விகள் திறக்கப்படுவதோடு கேள்விதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் அச்சந்தர்ப்பத்தில் சமுகமளிக்கலாம்.
4. கேள்விகளுடன் சம்பந்தப்பட்ட கேள்விப்பிணை அல்லது பெறுமதிக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயருக்கு பணம் வைப்பிட்டு பெறப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழையும் இணைத்திருத்தல் அவசியம்.
5. மேலதிக விவரங்களுக்குப் போதனா வைத்தியசாலைக் கணக்காளருடன் தொடர்புகொள்ளவும்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/24777)

உதயன்

## புனர்நிர்மாணப் பணி தடையின்றி நடக்குமா?

இரண்டு தசாப்தகாலப் போரினால் சீரழிந்து போயிருக்கும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை - தமிழர் தாயகத்தை - மீளக்கட்டியெழுப்பும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

தாய்லாந்தில் ஒக்ரோபர் 31முதல் நவம்பர் 3 வரை நடைபெற்ற இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது அமைக்கப்பட்ட உபகுழு, சுறுசுறுப்பாகப் பணியாற்றி இந்தப் புனரமைப்பு, புனர்நிர்மாண நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கில் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகளை அடையாளங்கண்டு, முன்னுரிமை அடிப்படையில் அவற்றை வரிசைப்படுத்துவது இந்த உபகுழுவின் முக்கிய பணியாக இருக்கும்.

புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகளுக்குக் கிடைக்கும் நிதியை உரிய முறையில் பங்கிட்டு அளிப்பதும், நடைபெறும் வேலைகளுக்கு நியாயப்படுத்தக்கூடிய வகையில் நிதி செலவிடப்படுவதை கண்காணித்து உறுதிப்படுத்துவதும் அடுத்த கட்டப் பொறுப்பாக இருக்கும்.

இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியைத் தேடும் பொறுப்பு இந்த உபகுழுவினுடையதல்ல. என்றாலும் கிடைக்கும் நிதி, நியாயப்படுத்தப்படத்தக்க வகையில் செலவிடப்படுவதை உறுதிப்படுத்தி, கண்காணிக்கும் தலையாய பொறுப்பு அதற்கு உண்டு.

மேற்படி புனரமைப்புக்குத் தேவையான நிதியைத் திரட்டும் முயற்சியில் அரசும், புலிகளும் சேர்ந்து ஈடுபடப்போவது இலங்கை அரசியலில் முக்கியமானதொரு திருப்பம்.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 25ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கமும் சேர்ந்து நிதி உதவி கோரி உரையாற்ற இருக்கின்றார்கள்.

"போரினால் அழிந்துபோயிருக்கும் தமிழர் தாயகத்தின் நிலையை உதவும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைப்பேன். அவசர - அவசிய - உதவிகள் வழங்கப்படவேண்டியதன் கட்டாயத்தை விளக்குவேன். செய்யப்படவேண்டிய புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகள் பற்றிய மேலோட்டமான படத்தை, உதவும் நாடுகளின் பிரதிநிதிகளின் முன் வைப்பேன். புனரமைப்புக்கான அரசியல் சூழ்நிலையும், சமாதான காலமும் கனிந்து வந்திருப்பதைத் தெளிவுபடுத்துவேன்" - என்று கூறுகின்றார் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்.

இந்தக் கூட்டத்தில் எழுபத்தேழரைக்கோடி அமெரிக்க டொலர் (சுமார் ஏழாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா) நிதியுதவி பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை இடம்பெற்ற ஏற்பாடுகள் திருப்திதருவனவாக உள்ளன. ஆனால், அடுத்துவரும் மாதங்களில் இதே முனைப்புடன் இப்பணி தொடருமா என்ற விடயத்தில் சந்தேகம் நிலவத்தான் செய்கின்றது.

புனரமைப்புப் பணிக்கென ஒதுக்கப்படும் நிதி, உதவும் நாடுகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் ஒரு நாட்டில் சேமிக்கப்படும். அது அநேகமாக நோர்வே அல்லது ஜப்பானாக இருக்கும். புனரமைப்புக்கான உபகுழு அடையாளங்கண்டு, அங்கீகரிக்கும் திட்டங்களுக்கு இந்த நிதி நேரடியாக அனுப்பிவைக்கப்படும் - இப்படித்தான் கடந்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின்போது அரச - புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் முடிவுசெய்திருந்தனர். அது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும் அதுதான் உண்மை.

ஆனால், உதவும் நாடுகள்மூலம் கிடைக்கும் நிதிக்கு என்ன வேலைகள் செய்யப்படப்போகின்றன என்பது குறித்து நாடாளுமன்றத்தில் குறை நிரப்புப் பிரேரணைமூலம் அங்கீகாரம் பெறப்படும் என்று இப்போது புதுக்கதை விடுக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சமாதானப் பேச்சுக்களில் கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு முரணான நிலைப்பாடு இது. அதுவும் அரசின் தலைவரான பிரதமர் அதைக் கூறுவது இந்த விடயத்தில் இணக்க நிலை பேணப்படுமா என்ற நெருடலை ஏற்படுத்தத் தவறவில்லை.

இத்தகைய தடைகளையெல்லாம் தாண்டி, புனரமைப்பு - புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகித் தொடருமா? என்ற நியாயமான சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.

# வன்னியில் புலிகளுக்கு மேலும் 10 தொலைபேசி இணைப்புகள்

## ரெலிகொம் நிறுவனம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

வன்னியில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கென மேலும் 10 தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு ரெலிகொம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சமாதானச் செயலணியின் வேண்டுகோளை அடுத்து விடுதலைப் புலிகளின் வன்னி அலுவலகங்களுக்கு இணைப்புகளை வழங்க ரெலிகொம் முடிவுசெய்துள்ளதாகக் கூறப்பட்டது.

முதல்கட்டமாக 10 இணைப்புகள் உடனடியாக வழங்கப்படவிருக்கின்றன என்றும் -

இதற்காக விரைவில் அங்கு பரிவர்த்தனை நிலையம் ஒன்றை ஆரம்பிககவிருப்பதாகவும் - ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - ரெலிகொம் நிறுவனத்தின் செயற்பாடுகள், புதிய திட்டங்கள் ஆகியன தொடர்பாக ரெலிகொம் தலைவர் சுகி அனான் தலைமையிலான எண்மர் அடங்கிய குழு ஒன்று கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு வன்னிக்குச் சென்ற இந்தக் குழு பல்வேறு விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடியதாகவும் -

பேச்சுக்கள் மிகப் பயன்தரக்கூடியதாக அமைந்திருந்தன என்றும் -

ரெலிகொம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுமுகாமையாளர் எஸ். கனகசூரியர் தெரிவித்தார். (எ-3)

# நாகர்கோவிலில் மீள்குடியமர்வு உடனடியாகச் சாத்தியமில்லை!

## அங்கு சென்று திரும்பிய குழு கருத்து

யாழ்ப்பாணம்,நவ.11

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் குடியிருப்புகள மற்றும் அடிப்படை வசதிகள் சேதமடைந்திருப்பதால் அப்பகுதியில் தற்போது மீளக்குடியமரும் சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துவருவது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினர் அண்மையில் அப்பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். அதன் பின்னரே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் அப்பகுதியைப் பார்வையிடச் சென்ற இந்தக் குழுவினரை நாகர்கோவில் படை அதிகாரி அப்பகுதிக்குள் கூட்டிச்சென்றார்.

இது தொடர்பாக அந்தக் குழுவினர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாகர்கோவில் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக கடற்கரைவரை பாரிய மண் அணை போடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் மீளக்குடியமர முடியாதநிலை உள்ளது. இவ்வீதிக்கு மேற்குப் புறமாக உள்ள பகுதியில் இராணுவத்தினர் தங்கியுள்ள ஐந்து வீடுகள் தவிர ஏனைய கட்டடங்கள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

அப்பகுதியில் உள்ள மரங்கள்கூட தறிக்கப்பட்டோ, பட்டுப்போய் பயனின்றிக் காணப்படுகின்றன. இதனால் அங்கு மீளகுடியமர்வு உடனடியாகச் சாத்தியமில்லை.

வீதிகள் யாவும் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. நாகர்கோவில் மகாவித்தியாலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது எனினும், அப்பகுதியில் வழிபாட்டிடங்கள் பாரிய சேதமின்றிக் காணப்படுகின்றன என அக்குழுவினர் மேலும் தெரிவித்தனர்.

அப்பிரதேசத்தைப் பார்வையிட இராணுவ வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட இவர்கள், வாகனத்திலிருந்து இறங்க அனுமதிக்கப்படவில்லை. மிதிவெடி அபாயத்தைக் காரணம் காட்டியே வாகனத்தைவிட்டுக் கீழே இறங்க அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியைப் பார்வையிட்டு முடிந்ததும் மேற்படி குழுவினரை குடத்னைக்கு அழைத்துவந்த இராணுவத் தரப்பினர் அங்கு கூட்டம் ஒன்றையும் நடத்தினர். (ஒ-4-5-36)

# யாழ்ப்பாணத்தில் இன்று முதல் 'ஒஸ்ரியோபதி' சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,நவ.11

இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் உள்ள ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் 'ஒஸ்ரியோபதி' மூளை நரம்பு நுண்ணியல் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

பிரிட்டனில் இருந்து யாழ்.வந்துள்ள வைத்தியர் மருதுகந்தப்பு இச்சிகிச்சைகளை வழங்கவுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளும் முதல் மருத்துவ சேவை இதுவாகும்.

பிறநாடுகளில் இத்துறையில் பல்வேறு சேவைகளை இவர் ஆற்றியுள்ளார். இவரிடம் சிகிச்சை பெற விரும்பும் நோயாளிகள் நாளைமுதல் தொடர்ந்து ஏழு நாள்களுக்கு காலை 9மணி தொடக்கம், மாலை 6மணிவரை ஸ்ரான்லி வீதியில் உள்ள ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் சிகிச்சை பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12-111)

# மருத்துவ நிபுணர் பற்றாக்குறை நீங்க ஐந்து ஆண்டுகளாயினும் ஆகலாம்!

## சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு,நவ.11

இலங்கையில் மருத்துவ நிபுணர்களுக்கான பற்றாக்குறை இன்னும் 5 ஆண்டுகளுக்காயினும் நீடிக்கும் என்று இலங்கை சுகாதார சேவை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

தற்போது மருத்துவ நிபுணர்கள் தேவைக்கேற்ற எண்ணிக்கையில் இல்லை. வைத்தியசாலையில் மருத்துவ நிபுணர்களைச் சந்திப்பதில் உள்ள சிரமத்தினைத் தவிர்க்க பொதுமக்கள் பணம் செலுத்தித் தனியாக வைத்திய நிபுணர்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இவற்றில்கூட பெரும் சிரமங்களைப் பொதுமக்கள் எதிர்நோக்கவேண்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குத் தேவையான மருத்துவ நிபுணர்களை உருவாக்குவதில் அரசு அதிக அக்கறை செலுத்தவேண்டுமெனவும் -

தற்போது ஆயிரத்துக்கும் அதிகமான வைத்தியர்கள் பட்டமேற்படிப்புக் கல்லூரிகளில் பயின்று வருவதாகவும் -

இவர்கள் சேவைக்குத் திரும்ப குறைந்த பட்சம் நான்கு ஆண்டு செல்லும் எனவும் -

சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வரும் வைத்திய நிபுணர்களைக் கொண்டே தற்போது பல சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகச் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-12)

### நாளை

ஐப்பசி 26
செவ்வாய்க்கிழமை
(12.11.2002)
திதி : அட்டமி
முன்னிரவு 7.27 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
பின்னிரவு 4.31 வரை.
கோஷ்டாஷ்டமி
சுபநேரம் : 10.31 - 12.08
ராகுகாலம்: 1.08 - 4.31
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும்போது நல்ல ஒரு காரியத்துக்காக உயிரை விடுவது மேல்.

## 15 கோடி ரூபா செலவில்

# தென்மராட்சிப் பகுதிக்கு குடிதண்ணீர்த் திட்டம்

சாவகச்சேரி,நவ.11

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் திணைக்களக் கிராமிய நீர் விநியோக சுகாதார நிறுவனம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திக்கழக உதவியுடன் தென்மராட்சியில் புனர்நிர்மாண அடிப்படையில் 15 கோடி ரூபா செலவில் குடி தண்ணீர்த் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபையின் நீர்வழங்கல் சுகாதாரத் திட்ட அதிகாரி எஸ்.மார்க்கண்டு, நிர்மாண வேலைகள் அதிகாரி வி.செ.சிவப்பிரகாசம் அடங்கிய குழு ஒன்று திட்ட நடைமுறை விவரங்களுடன் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இத்திட்டம் தொடர்பாகக் கடந்த புதன்கிழமை அவசரக் கலந்துரையாடல் சாவகச்சேரி நகரசபை நூலக மண்டபத்தில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் பொன்டிக் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இப்பிரதேச மக்களுக்கு நீர் வழங்கக்கூடிய நல்ல ஊற்றுள்ள கிணறுகளைத் தெரிவுசெய்தல், மக்கள் வாழும் இடங்களில் குடிதண்ணீர் இல்லாத இடங்களைத் தெரிவுசெய்தல் என்பன தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (ஒ-31)

# நாவற்குழி களஞ்சியத்தை புனரமைப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,நவ.11

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாகச் சேதமடைந்துள்ள நாவற்குழி களஞ்சியத்தைப் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த அரிசி தொடர்பாக விசாரணை செய்ய யாழ். வந்த உயர்மட்டக்குழு செய்த சிபாரிசை அடுத்தே இந்தக் களஞ்சியம் திருத்தப்படவிருக்கிறது.

கோண்டாவில் களஞ்சியத்துக்கு விஜயம் செய்த இக்குழு, அங்கு பொருள்கள் வைக்கப்பட்டுள்ள முறையைப் பார்வையிட்ட பின்னர், களஞ்சியப் பற்றாக்குறை குறித்து பிரதமர் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து நாவற்குழியில் உள்ள களஞ்சியத்தை உடன் புனரமைக்கும்படி யாழ்.அரச அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் களஞ்சியத்தைப் புனரமைக்க 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்காக முதற்கட்டமாக பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் சண்டைவெடிகள் அகற்றப்பட்டுள்ளதால் புனரமைப்புப் பணிகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. (ம-3)

# வெள்ளிவிழா ஆண்டில்

# இலங்கை வங்கியின் 2ஆவது கிளை

25 ஆண்டுகள் தன்னிகரற்ற சேவை

11.11.2002

- வெள்ளிவிழா ஆண்டில் கணனி மயப்படுத்தப்பட்ட தன்னியக்க சூழலில் சேவையை தனது அபிமானம் மிக்க வாடிக்கையாளர்களுக்கு வழங்கத் தயாராகின்றது.
- இரண்டரை தசாப்தங்களாக ஆதரவுடன் ஒத்துழைப்பு நல்கிய வாடிக்கையாளர்களுக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைச் சிரந்தாழ்த்தித் தெரிவித்துக்கொள்கின்றோம்.
- எதிர்காலத்திலும் உங்கள் ஆதரவினை நீங்கள் மேன்மேலும் நல்குவீர்களென எதிர்பார்க்கின்றோம்.
- 11.11.2002இல் நடைபெறும் எம் வெள்ளிவிழா நிகழ்வில் கலந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
- இக்கிளையின் வெற்றிக்காக அயராது உழைத்த அனைத்து மூத்த ஊழியர்களுக்கும் நான் நன்றி கூறுவதுடன், இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்விழாவில் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராக (Asst.Gen.Manager - Northern)
இன்று பதவியேற்கும்

**திரு.க.பாலசுப்பிரமணியம்** அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கிறார்.

## வெள்ளிவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

| | | |
|---|---|---|
| **ரவி அன்ட் ராஜ் சில்க்ஸ்**<br>இல.77, மின்சார நிலைய வீதி,<br>யாழ்ப்பாணம். | **கே.வைத்திலிங்கம் அன்கோ**<br>இல.38, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். | **ஹர்சன் எலெக்ரிக்கல்ஸ்**<br>4(14), ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். |
| **ஜெயந்தா ரெக்ரைல்ஸ்**<br>24B, நியூ மாக்கற்<br>பெரியகடை, யாழ்ப்பாணம். | **பிரபா பார்மஸி**<br>57, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். | **உஷா ஏஜென்ஸி**<br>145, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். |
| **M/S வெங்கடேஸ்வரா**<br>79, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | **ரவி மோட்டேர்ஸ்**<br>52, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். | **உமா பான்ஸி பலஸ்**<br>Mr.K.கனகநாயகம்<br>நவீன சந்தை, யாழ்ப்பாணம். |
| **ஸ்ரீ கணேஸ் ஸ்ரோர்ஸ்**<br>453, கே.கே.எஸ். றோட்,<br>யாழ்ப்பாணம். | **பசோ ஆட்ஸ் பிளாஸ்ரிக்**<br>35, கன்னாதிட்டி றோட்,<br>யாழ்ப்பாணம். | **அருள் விநாயகர் ரேடர்ஸ்**<br>Mr.K.திருச்செல்வம்<br>ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| **பரகன் டீசல் என்ஜினியர்ஸ்**<br>70, அரசடி வீதி,<br>யாழ்ப்பாணம். | **ஏ.எஸ்.ஆறுமுகம் அன் சன்ஸ்**<br>81, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். | **விஜிதா ரெக்ஸ்**<br>109, பெரிய கடை,<br>யாழ்ப்பாணம். |
| **அல்டி எலெக்ரோனிக்ஸ்**<br>15, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். | **M/S வி.எஸ்.பி. குறூப்**<br>275, 277, ஸ்ரான்லி றோட்,<br>யாழ்ப்பாணம். | **M/S குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**<br>42, 44, பெரியகடை,<br>யாழ்ப்பாணம். |
| **M/S மகாநதி ரெக்ஸ்**<br>16, நியூ மாக்கெற்,<br>யாழ்ப்பாணம். | **கிரிஸ்ரி கொன்ஸ்றக்சன்**<br>**(என்ஜினியர்ஸ் & கொன்ஸ்டறக்ரேஸ்)**<br>93, மெயின் வீதி, யாழ்ப்பாணம். | **V.V.T. லிங்கு பார்**<br>வல்வெட்டித்துறை. |
| **M/S செனித் மாக்கற்றிங் & அட்வட்டைசிங் சிஸ்ரம்ஸ்**<br>19/3, கொழும்புத்துறை றோட்,<br>கண்டுக்குளி, யாழ்ப்பாணம். | **ஈசன் மொத்த விற்பனை நிலையம்**<br>*உரிமையாளர்: சோமசுந்தரம் சுதாகரந்தன்*<br>63, பருத்தித்துறை வீதி,<br>ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். | |

## தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கி

**முகாமையாளரும்,**
**ஊழியர்களும்.**

இலங்கை வங்கி 2ஆம் கிளை
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(C/24729)

# மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம்

**வெளியகல்வு**

(வெ/236) திருமதி புவனேஸ்வரி கனகசபை
(வெ/237) திருமதி யோகாதேவி மனோகரன்
(வெ/239) கணேஸ் வைத்தீஸ்வரன்
(வெ/243) பெருமாள்பிள்ளை சேதுராமன்
(வெ/246) சின்னையா ரவிச்சந்திரன்
(வெ/248) செல்லையா மகாதேவா
(வெ/250) காசிநாதர் இராஜேந்திரன்
(வெ/252) சுப்பிரமணியம் கதிரவேல்
(வெ/253) மங்களம் இராஜன்
(வெ/254) திருமதி நேவிஸ் றோசாறி
(வெ/255) திருமதி ஆரோக்கியசீலி கோமஸ்
(வெ/257) திருமதி சுபத்திரா குணபாலசிங்கம்
(வெ/260) சிவசம்பு தங்கராஜா
(வெ/262) செல்வி நிர்மலா சின்னத்துரை
(வெ/266) ஆறுமுகம் சிவராசா
(வெ/271) விசுவநாதர் ஸ்ரீஸ்காந்தா
(வெ/275) திருமதி வனிதாமணி கோபாலநாதன்
(வெ/277) சுப்பையா தனபாலசிங்கம்
(வெ/280) பிராமநாயகம் சந்தணமுத்துச்சாமி
(வெ/283) சுப்பிரமணியம் சிங்காரவேல்
(வெ/285) வேலுப்பிள்ளை பிறேம்குமார்
(வெ/289) திருமதி சந்திரிகா அருட்செல்வம்
(வெ/290) திருமதி பிறேமலதா உதயகுமாரநாதன்
(வெ/297) திருமதி கனகம்மா மழவராயமுதலி
(வெ/302) மரியதாஸ் டோனிகேட்டிஸ்
(வெ/305) சந்தாம்பிள்ளை மேஜர் அன்ரன்
(வெ/306) திருமதி ஜெகசொரூபி தர்மலிங்கம்
(வெ/314) வல்லி கனகன்
(வெ/321) திருமதி இராஜேஸ்வரி நவரட்ணம்
(வெ/322) திருமதி திரேசா இம்மானுவேல்
(வெ/329) திருமதி சீதா விஜயராஜா
(வெ/331) சின்னத்துரை ஜெயமனோகரன்
(வெ/332) திருமதி பராசக்தி செல்வநாயகம்
(வெ/335) கனகராசா சீனிவாசகம்
(வெ/336) திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்
(வெ/345) சின்னராமன் செட்டியார் சுப்பிரமணியம்
(வெ/347) திருமதி இராசம்மா கணேசன்
(வெ/348) திருமதி விநாயகபாக்கியம் சண்முகதாசன்
(வெ/354) செல்லையா கைலைநாதன்
(வெ/355) செல்வி மேரிஇமெல்டா அந்தோனிப்பிள்ளை
(வெ/366) திருமதி கலாநாயகி பாலகிருஸ்ணன்
(வெ/370) மார்க்கண்டு ரவிசங்கர்
(வெ/371) குமாரகுருசிங்கம் நிதர்சன்
(வெ/377) சிவக்கொழுந்து நடராசா
(வெ/378) தேவஅருள்ராஜா றோயிஸ் மைக்மிலன்
(வெ/383) நாராயணசாமி சந்திரசேகரன்
(வெ/387) கந்தையா நடராஜா
(வெ/390) செல்வி வசந்தகுமாரி ஏகாம்பரம்
(வெ/392) தம்பிப்பிள்ளை ஞானசேந்தன்
(வெ/393) விணாசித்தம்பி ஜெயராசா
(வெ/394) திருமதி முத்துமாரி துரைராசா
(வெ/396) சதாசிவம் அற்புததேவராஜா
(வெ/403) முத்துக்குமாரு விணாயகசேகரம்
(வெ/411) சுப்பிரமணியம் நித்தியானந்தன்
(வெ/414) நடராசா பாலேந்திரா
(வெ/419) திருமதி இந்திராணி சுந்தரலிங்கம்
(வெ/420) திருமதி பவளம் மனோகரன்
(வெ/422) செல்லத்துரை தாமோதரநாதன்
(வெ/425) பாக்கியநாதர் கிறிஸ்ரியோசப்
(வெ/430) செல்வி கிருபா டேவிட் நடராசா
(வெ/436) திருமதி ராகினி துரையப்பா
(வெ/438) திருமதி மரியறோஸ் மரியதாஸ்
(வெ/441) சிவனேஸ்வரி மரியாபரணம்
(வெ/442) மரியாம்பிள்ளை அன்ரன் அருளேஸ்வரன்
(வெ/447) சிவராசா சித்திராங்கதன்
(வெ/454) செல்வி தர்சினி சிவலோகசுந்தரம்
(வெ/459) திருமதி நகுலாம்பிகை செல்வக்குமரான்
(வெ/460) விஜயதர்மா குமரேஸ்வரதாஸ்
(வெ/463) திருமதி தையல்நாயகி இராமநாதன்
(வெ/466) சின்னத்துரை கோகுலதாசன்
(வெ/467) இரத்தினம் கணேசலிங்கம்
(வெ/470) செல்வி நிலாநிதி சிவகடாட்சம்
(வெ/471) சுப்பிரமணியம் சந்திரன்
(வெ/472) திருமதி தங்கம்மா சிவலிங்கம்
(வெ/473) சுப்பிரமணியம் சண்முகநாதன்
(வெ/476) திருமதி மொறின் வரதன்
(வெ/477) திருமதி சற்குணஜோ சிறிதரன்
(வெ/480) மாணிக்கவாசகம் தங்கவேலு
(வெ/483) திருமதி ருக்குமணி உதயகுமார்
(வெ/484) பசுபதிப்பிள்ளை அரசரத்தினம்
(வெ/488) நவசிவாயம் வாசஸ்பதி
(வெ/489) தங்கவடிவேல் மகேந்திரன்
(வெ/490) சண்முகம் பத்மநாதன்
(வெ/493) முருகேசு தவராஜா
(வெ/501) குமாரசாமி சிவசுப்பிரமணியம்
(வெ/502) சண்முகநாதன் யோகநாதன்
(வெ/504) விசுவலிங்கம் சிவச்செல்வன்
(வெ/507) திருமதி திவ்வியசிறோன்மணி நாகராஜா
(வெ/508) செய்யது முகமட்அலி
(வெ/510) தோமஸ் சிறிநாதன்
(வெ/515) செல்வி இரத்தினஜோதி பரஞ்சோதி
(வெ/316) தம்பிமுத்து விநாயகமூர்த்தி
(வெ/518) திருமதி இராஜேஸ்வரி அரியரட்ணம்
(வெ/522) திருமதி யசோதா ஜெயநாதன்
(வெ/523) திருமதி சுகிர்தா துரைசாமி
(வெ/524) பாலசிங்கம் சிவகுணானந்தன்
(வெ/526) ஆறுமுகம் சிவபாலசுந்தரம்
(வெ/527) திருமதி சிவஞானவல்லி நவரத்தினம்
(வெ/529) இராஜசூரியர் ஈஸ்வரகுமாரன்
(வெ/531) திருமதி அம்றோசியா சுசீலா இயூஜின் மரியாம்பிள்ளை
(வெ/532) சிவரட்ணம் பவானந்தன்
(வெ/538) வேலாயுதம் வயித்திலிங்கம்
(வெ/540) சங்கரையா நாராயணசாமி
(வெ/541) மரியாம்பிள்ளை பிரான்சிஸ் கிறிஸ்பின்
(வெ/542) ஆறுமுகம் கதிர்காமநாதன்
(வெ/543) திருமதி லலிதா தர்மகுலசிங்கம்
(வெ/544) திருமதி சிவபாக்கியம் சிறிபாலமோகன்
(வெ/546) திருமதி மேகனா செல்வராஜா
(வெ/548) திருமதி கௌரி சிறிரஞ்சன்
(வெ/549) திருமதி ஊர்மிளா அன்ரனற் செல்வநாயகம்
(வெ/553) திருமதி சாந்தினி ஞானரட்ணம்
(வெ/555) சுந்தரமூர்த்தி இராசகுமார்
(வெ/556) மயில்வாகனம் சிவராசா
(வெ/557) திருமதி மாலினிதேவி ஜோதிவர்மன்
(வெ/561) நடராசா ஞானலிங்கம்
(வெ/562) பாலசுப்பிரமணியம் தர்மரத்தினம்
(வெ/570) திருமதி வாசுகி சிறிஸ்கந்தரூபன்
(வெ/572) கணபதிப்பிள்ளை அப்பாத்துரை
(வெ/574) செல்வி பிறேமலோஜினி சண்முகரட்ணம்
(வெ/577) சற்குணராசா ராஜ்குமார்
(வெ/582) செல்வி பிறேமறோகினி ஈடித்லூயிஸ்
(வெ/596) அருணாசலம் கதிர்காமநாதன்
(வெ/598) செல்வி இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை
(வெ/601) திருமதி குமுதினி சிவதாஸ்
(வெ/603) திருமதி கௌரியம்பாள் ஆனந்தராசா
(வெ/604) இளையதம்பி தில்லைநாயகம்
(வெ/605) திருமதி சிவகௌரிதேவி தர்மலிங்கம்
(வெ/607) திருமதி முத்துராணி ஜெகராசசிங்கம்
(வெ/611) டானியல் புரட்சிதாசன்
(வெ/614) திருமதி இராஜேஸ்வரி வேலும்மயிலும்
(வெ/617) நாகலிங்கம் கந்தசாமி
(வெ/626) விணாசித்தம்பி கணேசமூர்த்தி
(வெ/628) திருமதி பீஸ்ஜோய் ஞான்துரை
(வெ/629) திருமதி இராணி செல்வரத்தினம்
(வெ/631) செல்வி ரூபா மகாதேவா
(வெ/633) திருமதி மகேஸ்வரி இராசதுரை
(வெ/634) திருமதி சத்தியதேவி பாலகுருநாதன்
(வெ/638) முத்துக்குமாரசாமி கைலாசநாதன்
(வெ/639) கணபதிப்பிள்ளை சோதிநாதன்
(வெ/640) செல்வி வயிலற் ஜோன்
(வெ/643) நாகலிங்கம் ஜீவரட்ணம்
(வெ/645) சின்னத்துரை ஜெயநாதன்
(வெ/648) செல்வி சத்தியபாமா வேலாயுதபிள்ளை
(வெ/650) திருமதி அன்னலட்சுமி குணசிங்கம்
(வெ/651) திருமதி புனிதகுணமலர் தில்லைநடேசன்
(வெ/652) திருமதி யோகராணி கைலேஸ்வரன்
(வெ/659) செல்லத்துரை பொன்னுத்துரை
(வெ/670) மனுவேல் அல்பேட் இரத்தினசிங்கம்
(வெ/672) கிருஷ்ணர் காங்கேசன்
(வெ/679) திருமதி ஞாம்பிகை மகேந்திரஜோதி
(வெ/680) சாந்திக்குமார் அரியரட்ணம்
(வெ/685) கதிரவேலு சிவபாலன்
(வெ/686) செல்வி புஸ்பலதா தங்கராசா
(வெ/699) செல்வி மாலினி சிறிநிவாசன்
(வெ/701) இராசதுரை செல்வநாயகம்
(வெ/702) கணபதியார் நாகமுத்து
(வெ/705) கணபதிப்பிள்ளை இரத்தினவேல்
(வெ/707) இளையதம்பி நடராசா
(வெ/708) திருமதி சாந்தினிதேவி பரமேஸ்வரன்
(வெ/718) செல்வி அனிற்றா சுபோதினி சந்தியாபிள்ளை
(வெ/719) கனகரத்தினம் இரத்தினசிங்கம்
(வெ/720) வைரமுத்து சிவசம்பு
(வெ/721) கந்தையா கருணாகரன்
(வெ/725) திருமதி சந்திரா யோககோபாலகிருஷ்ணன்
(வெ/726) செல்வி சாந்தி பாலசுப்பிரமணியம்
(வெ/727) செல்வி சிவகலாயாமினி வைத்தியலிங்கம்
(வெ/732) திருமதி புஸ்பமலர் இராஜசேகரம்
(வெ/733) திருமதி சுமதி சிவர்க்கலோகேந்திரன்
(வெ/734) பிரான்சிஸ் மக்ஸமியன்
(வெ/736) பிரான்சிஸ் மக்ஸமியன்
(வெ/740) திருமதி சுமதி ஜெயந்தா தவீந்திரன்
(வெ/741) திருமதி அனுஷா யோகாநந்தன்
(வெ/744) இராஜரட்ணம் பத்மநாதன்
(வெ/745) செல்வி யசிந்தா சசிகலா தேவசகாயம்
(வெ/748) செல்வி ஜெயதேவி மகாதேவன்
(வெ/750) திருமதி நாகேஸ்வரி இராசரத்தினம்
(வெ/756) சபாநாதன் நைஸ்றுபநாதன்
(வெ/758) பொன்னையா இராமநாதன்
(வெ/763) நாகநாதி பேரம்பலம்
(வெ/767) விசுவலிங்கம் நடராஜா
(வெ/773) செல்வி நிரஞ்சினி பாலசுப்பிரமணிம்
(வெ/774) நாகர் தம்பித்துரை
(வெ/776) குலேந்திரன் வயிரவிப்பிள்ளை
(வெ/777) திருமதி கொலட் சுவாம்பிள்ளை
(வெ/779) ஜெயராஜா புனிதராஜா
(வெ/789) திருமதி கிறேஸ் விமலராணி லோறன்ஸ்
(வெ/790) சிவசம்பு நவரத்தினம்
(வெ/791) சோமசுந்தரம் நடேசரத்தினம்
(வெ/792) திருமதி இரத்னா செவ்ஸ்ரீனா பகீரதன்
(வெ/794) திருமதி சத்தியவதி கருணாமூர்த்தி
(வெ/795) திருமதி விஜயராணி விஜயரஞ்சன்
(வெ/796) மாணிக்கம் இராசு
(வெ/799) திருமதி சுதந்திரதேவி சண்முகநாதன்
(வெ/802) திருமதி கிமேலேஸ்வரி தவராசா
(வெ/303) இராசரத்தினம் சுப்பிரமணியம்
(வெ/805) திருமதி தயாநிதி திருநாவுக்கரசு
(வெ/807) திருமதி மகாலட்சுமி இரத்தினம்
(வெ/809) திருமதி சுகிர்தலோசனா துரைராசா
(வெ/810) திருமதி பரமேஸ்வரி இராசையா
(வெ/812) பொன்னுத்துரை சண்முகராசா
(வெ/820) திருமதி பராசக்தி தவலிங்கம்
(வெ/822) ஞானப்பிரகாசம் குலசேகரம்
(வெ/825) திருமதி ஜெயமணிதேவி திருச்செல்வம்
(வெ/826) சின்னப்பு அட்புத்துரை
(வெ/830) செல்வி சத்தியபாமா சடாட்சரநாதன்
(வெ/833) திருமதி நவமணி செல்வரத்தினம்
(வெ/834) திருமதி சரஸ்வதி கனகரத்தினம்
(வெ/837) செல்லையா பரம்சோதி
(வெ/839) கதிரவேலு சண்முகலிங்கம்
(வெ/840) தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி
(வெ/842) திருமதி சுந்தரேசுவரி மனோகரன்
(வெ/844) திருமதி நிர்மலாதேவி ஜெயராஜா
(வெ/846) திருமதி அருள்சோதி சோமசுந்தரம்
(வெ/847) வைரமுத்து பாலசுப்பிரமணியம்
(வெ/852) தில்லையம்பலம் ஜெகதீசன்
(வெ/853) திருமதி வசந்தி ஞானதாஸ்
(வெ/856) செல்லையா இராசலிங்கம்
(வெ/857) கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம்
(வெ/859) பொன்னுச்சாமி செகராஜசேகரம்
(வெ/860) திருமதி கனகாம்பிகை கந்தசாமி
(வெ/862) திருமதி ராகினி சண்முகநாதன்
(வெ/863) திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம்
(வெ/864) திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
(வெ/869) பொன்னுத்துரை யோகானந்தராசா
(வெ/870) பொன்னுத்துரை குகானந்தராசா
(வெ/874) திருமதி இராஜேஸ்வரி தம்பையா
(வெ/875) பழனிவேல் லோகநாதன்
(வெ/876) அன்ரன் எகஸ்பெரிற்றஸ் சுவாஜி இராசேந்திரா
(வெ/881) திருமதி மேரிபுளோரன்ஸ் யோசவ்
(வெ/884) திருமதி மஞ்சுளா தில்லைச்சந்திரன்
(வெ/885) ஜேம்ஸ் தம்பிராஜா சற்குணரஞ்சன்
(வெ/889) நாகமணி சிவசுப்பிரமணியம்
(வெ/892) இளையதம்பி தம்பு
(வெ/895) சுப்பிரமணியம் சுபதாசன்
(வெ/898) திருமதி மொனிக்கா மாலதி விஸ்வலிங்கம்
(வெ/900) திருமதி புஸ்பராணி இலங்கைநாதன்
(வெ/901) திருமதி சகிலா தர்மகுலன்
(வெ/903) திருமதி கணேசராணி பிரேம்குமார்
(வெ/904) திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்
(வெ/905) செல்வி சாந்தினி தங்கவேல்
(வெ/906) சோமசுந்தரம் கெங்காதரன்
(வெ/907) இராஜதுரை இராசநாயகம்
(வெ/908) திருமதி றோஸ்மணி சுப்பிரமணியம்
(வெ/910) திருமதி சாந்தி பாலச்சந்திரன்
(வெ/912) திருமதி திருச்செல்வராணி இராஜேந்திரன்
(வெ/913) திருமதி சுமதி சபேசன்
(வெ/914) திருமதி உஷா ஜெயக்குமாரன்
(வெ/917) வேலுப்பிள்ளை குலசிங்கம்
(வெ/920) தம்பு சிவராஜலிங்கம்
(வெ/921) திருமதி நிர்மலா அன்னலிங்கம்
(வெ/922) செல்லையா செல்வநாயகம்
(வெ/929) திருமதி மனோரஞ்சினி சண்முகபாலன்
(வெ/935) மாணிக்கவாசகம்பிள்ளை பாலச்சந்திரன்
(வெ/936) மார்க்கண்டு குகதாஸ்
(வெ/937) திருமதி செல்லம்மா சின்னத்துரை
(வெ/940) திருமதி மேரி அன்ரோனியாடிலமினா வின்சஸ்லோஸ்
(வெ/941) முத்துச்சாமி சிறீதரன்
(வெ/942) திருமதி ஜீவமணி பாலகுருநாதன்
(வெ/944) காசிப்பிள்ளை நடேசன்
(வெ/951) திருமதி பாக்கியேஸ்வரி சண்முகநாதன்
(வெ/953) திருமதி கணேசம்மா மயில்வாகனம்
(வெ/954) சிவப்பிரகாசம் பிறேமாகரன்
(வெ/960) தர்மலிங்கம் கிருஸ்ணசாமி
(வெ/963) திருமதி மகேஸ்வரி திருஞானசம்பந்தமூர்த்தி
(வெ/965) நாகலிங்கம் இராசரத்தினம்
(வெ/967) பாலேந்திரா சேரன்
(வெ/968) சிதம்பரநாதன் சிறிகரன்
(வெ/969) செல்லையா இராசரத்தினம்
(வெ/970) முருகேசு வேலாயுதம்
(வெ/972) திருமதி சுபத்திராதேவி வாமதேவன்
(வெ/974) சின்னத்துரை சிறிநேசா
(வெ/976) செல்வி சுஜனி கந்தையா
(வெ/978) செல்வி ராகினி தியாகராசா
(வெ/981) திருமதி மாலினி சோமஸ்கந்தன்
(வெ/983) செல்வி கவுஸ்ரஸ் கனகசுந்தரம்
(வெ/986) திருமதி அன்னாசிரோன்மணி இராசரத்தினம்
(வெ/987) திருமதி அரியதேவி ஹூதர்
(வெ/989) திருமதி செல்வானந்தி விஜயசிறி
(வெ/994) கனகசபை தெய்வேந்திரராஜா
(வெ/999) திருமதி வத்சலா யோர்ச் ஸ்டான்லி
(வெ/1003) திருமதி றஞ்சிதம் விக்னேந்திரன்
(வெ/1005) சரவணமுத்து சிறிகந்தராசா
(வெ/1008) சுந்தரலிங்கம் சுதர்சன்
(வெ/1011) திருமதி பத்மாவதி வாசுதேவன்
(வெ/1012) திருமதி கமலாதேவி சண்முகராசா
(வெ/1015) மார்க்கண்டு குணாளன்
(வெ/1017) திருமதி ராஜராஜேஸ்வரி வேலுப்பிள்ளை
(வெ/1018) திருமதி திகன்மதி செல்வேந்திரன்
(வெ/1021) திருமதி கமலாதேவி ஜெயச்சந்திரன்
(வெ/1022) செல்லையா சண்முகராசா
(வெ/1023) செல்வி தவரஞ்சினி சிவசுப்பிரமணியம்
(வெ/1024) பொன்னையா கோவிந்தசாமி
(வெ/1025) பொன்னுச்சாமி யோசப் தேவானந்தன்
(வெ/1028) செல்லையா ஜயாத்துரை
(வெ/1030) கந்தையா இரத்தினம்
(வெ/1031) திருமதி டெய்சி இன்பமலர் ஞானப்பிரகாசம்
(வெ/1032) ஆறுமுகம் கந்தையா மாணிக்கம்
(வெ/1034) செல்வி ரிசிவதனி கனகரெட்ணம்
(வெ/1035) இராசரத்தினம் தேவசகாயம்
(வெ/1042) குஞ்சிதபாதசர்மா கரிகரசர்மா

## கோவில் குளத்தில் புதுவிதக் களை

(கோப்பாய், நவ.1)

கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோவில் குளத்தில் புதுவகைக் களை இனம் ஒன்று பரவி நீர்ப்பரப்பை மூடிக் காணப்படுகிறது.

மேலும் இக்குளத்தில் நீர் நிரம்பிய பின்னர் வாய்க்கால் வழியே வழிந்து வயல் பரப்பிற்குச் செல்வதனால் வயல்களிலும் இக்களை இனம் பரவிவிடும் அபாயநிலை இருப்பதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இக்குளம் கடந்த 1993ஆம் ஆண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் சீர்ப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இது சீரமைக்கப்படவில்லை.

இதனால் அங்கு உரிய நீர்க்கொள்ளளவை பேணமுடியாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ-72)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள றோணியோ மெசின், தமிழ்த் தட்டச்சு இயந்திரங்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. வே.சிறி, இல.249, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.இந்துக் கல்லூரி முன்பாக). (10392)

சகல ஆவணங்களுடன் நல்ல நிலையில் உள்ள 50சிறி தொடர் இலக்கமுடைய **L.3 Hundred Van**, ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் (பரீனா) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றாஜிவ், ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P. No. 3529, 2867.** (10420)

**CD 125 Honda** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 75, அம்மன் றோட், நல்லூர் (வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு முன்பாக). (10428)

நல்ல இன கறணப் புறாக்கள், குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 93, கோவில் வீதி (கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில்). பார்வையிடும் நேரம்: காலை 9.30 - 1.00 மணி வரையும், மாலை 5.00 மணிக்குப் பின்பும். (10464)

## எங்கள் நாடு

பரிசுபெற்ற வானொலி நாடகங்களின் தொகுப்பு, எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற ஏழு நாடகங்கள். 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். ரூபா 75/=. (10352)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான **Prima Broiler** குஞ்சுகள் குறைந்த விலையிலும், அதி விசேட **Prima** பேட்டுக் குஞ்சுகளும 14-11-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவுசெய்யவும். 19, முருகேசர் ஒழுங்கை, (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10315)

## திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கெமராவகைகள், எலக்ரோனிக பிளாஸ்கன் திருத்துதல், சிறிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு. தொடர்பு: சு.நாராயணசாமி, இல.301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (10453)

## திருமண சேவை

1971 **B.Sc.** கணனிப் பட்டதாரி, 1971 லண்டன் எஞ்சினியர், 1959, 1964 கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமக்கள், 1971 கனடா பிரஜாவுரிமை பெற்ற பட்டதாரி மணமக்கள், சகல மதத்தவர்களுக்கும் (இருபாலாரும்) மணமக்கள் உண்டு. தொடர்பு: 298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டம் அருகில்). (10465)

1971, ஆயிலியம், செவ்வாய் 8, கிரகபாவம் கூடிய பட்டதாரி ஆசிரியைக்கு படித்த, அரச/தனியார் துறை மணமகன் உள்நாட்டில் தேவை. மணமக்கள் தேவைக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (10445)

## இடம் தேவை

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கிற்கும், சங்கத்தானைக்குமிடையில் கண்டி வீதியை முகப்பாகக் கொண்ட சட்டத்தரணி காரியாலயம் நடத்துவதற்கு உகந்த இடம் தேவை. நியாயமான வாடகை தரப்படும். தொடர்பு: ச.சிவரூபன், சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம். (10449)

## 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு கொடுப்பனவு இல்லை

வடமராட்சி கிழக்கு, நவ.11

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 'உ' பங்கீட்டு அட்டை உள்ள குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையான 15ஆயிரம் ரூபா வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 'உ' பங்கீட்டு அட்டை இல்லாதவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா உதவு தொகை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மேற்கொண்டுவருகின்றது. (ஒ-182)

## மானிப்பாய்ப் பகுதியில் நுளம்பு வலைகள் விரைவில் விநியோகம்

சண்டிலிப்பாய்,நவ.11

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நுளம்புவலைகள் விரைவில் விநியோகம் செய்யப்படவுள்ளன.

யாழ்.சுகாதார திணைக்கள மலேரியா நோய்த் தடுப்பு பிரிவினால் அண்மையில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்ட 500 நுளம்புவலைகளே இவ்வாறு பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து மீளக் குடியமர்ந்த - மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட - வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரிவு பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள் தத்தமது பிரிவில் இதற்கு தகுதியானோரைத் தெரிவு செய்யும் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். (எ-135)

## வேலை வாய்ப்பு தேவை

**கணக்காளராக (Book Keeper) 10 வருடத்திற்கு மேல் கடமையாற்றிய அனுபவமுடையவருக்கு யாழில் வேலை வாய்ப்பு தேவை.**

*தொடர்பு:* **T.K.சுந்தரம்.**
T.P.: 2223873 (10483)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 11 - 1969

மறைவு 23 - 10 - 2001



*கந்தையா வீதி, சாவகச்சேரி*

### முத்துலிங்கம் வாணிதாசன் (வவா)

*(பழைய மாணவன், நவீல்ட் பாடசாலை)*

திதி: 11-11-2002

வவா! நீர் எம்மை விட்டுச் சென்றுவிட்டாலும் - உமது நினைவுகள் எம்முடன் என்றும் நிலைத்திருக்கும்.

உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*முடமாவடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (10481) - **குடும்பத்தினர்.**

## நீங்காத நினைவினில் 2ஆம் ஆண்டு

மண்ணில் முத்து 11 - 01 - 1939

விண்ணில் சொத்து 03 - 11 - 2000



### சின்னையா முத்துக்கிருஷ்ணர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*திதி: ஸப்தமி - 11.11.2002*

ஆண்டுகள் மறைய மறைய
உங்கள் நினைவுகள் நிறைய நிறைய
ஆண்மைமிக்க உங்கள் குரல்
இன்னமும் கேட்கிறது - எம் காதுகளுக்கு.
அயர்ச்சி இல்லாத உங்கள் உருவம்
இன்னமும் தெரிகிறது - எம் கண்களுக்கு.
முன்னர் நீங்கள் வாழ்ந்தது உண்மை -
இந்த உலகில்
இன்றும் நீங்கள் வாழ்வது உண்மை -
எங்கள் உள்ளங்களில்.

*தபால் கந்தோரடி,*
*கந்தரோடை.* (C/24817) - **குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறுப்பிட்டி, சிவகாமி அம்மன் ஆலய தலைவராகவும் செயலாளராகவும் பொருளாளராகவும் பதவி வகித்து பலவிதங்களிலும் நற்பணி ஆற்றி, 1991ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற உதவிய சிறுப்பிட்டி வடக்கு

**சபாபதி தங்கராசா**

அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்ததைப் பாராட்டி, நற்பணி பல ஆற்ற அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

*சிறுப்பிட்டி.* (10476) ஆலய பரிபாலன சபையினர்.

# மரண அறிவித்தல்கள்

## சூசை செபமாலைமுத்து

*(சீனியர் நாகேஸ்வரி)*

ஊர்காவற்றுறை, கோம் றோட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், இல.16, யாழ்.வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசை செபமாலை முத்து 09.11.2002 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சூசை - றோஸம்மா தம்பதிகளின் மகனும் மார்க்கண்டு - சின்னத்தங்கச்சியின் மூத்தமருமகனும் செபமாலைமுத்து நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் பற்றிமா (டெல்மா - நோர்வே), அன்ரனி சகாயராஜா (டெல்சன் - நோர்வே), மதனச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜீவானந்தா (ஆச்சிரமம்), வணக்கத்துக்குரிய தந்தை லினஸ் மரியநாயகம் மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, தவராசா, தருமலிங்கம், சிறிகந்தராசா, புஸ்பராணி, உதையராஜா, விஸ்வராஜா, பத்மராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயரெட்ணம், தங்கராசா, நாகேஸ்வரன், செபரெட்ணம், பாக்கியலீலா, ஞானசரஸ்வதி, பஞ்சகல்யாணி, சசிகலா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16, யாழ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10475)

தகவல்:
மனைவி S.நாகேஸ்வரி.

## அழகர்சாமி சிவகுமார்

இல.30, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அழகர்சாமி சிவகுமார் 09.11.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அழகர்சாமி - ஐயம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் சுபோதினியின் அன்புத் தந்தையும் நாகேந்திரன், சரவணகுமார், சுகந்தி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராமராஜ், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கௌரியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் விமல், சுரேஷ், சுபானுயா, அபர்ணா, ஐங்கரன், லோகநாதன், ஜெயந்தி, சசிக்குமார், ரேணுகா, சுந்தரி ஆகியோரின் மைத்துனரும் துளசிகா, பாதுஷன், தனுஷன் ஆகியோரின் சிறிய தந்தையும் மனோசிகன், வைஷ்ணவி, சஞ்சீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2002) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.நாகேந்திரன் } சகோதரர்
அ.சரவணகுமார் }
அ.ராம்ராஜ் மாமா

*இல.30, கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10477)

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



## மேஜர் கமலன்

### தெய்வேந்திரம் விஜயரூபன்

தாயின் மடியில்:
11.06.1974

தாயக விடிவில்:
11.11.1999

*தேச விடுதலைக்காக மண்ணின்*
*மடியில் வித்தாகிய எம் கமலனே!*
*உன் உறவுகளும் நட்புகளும்*
*உண்மையெனில் இவ்விடத்தில்*
*கவிதைகள் தேவையில்ல.*

*உன்பிரிவு மறவா:*
**நண்பன்**

*தென்மராட்சி.* (10484)

# மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்போரை உலக சமுதாயம் மன்னிக்கமாட்டாது!

**முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக, ஸ்ரீலங்கா விமானப்படையில் நீண்டகாலம் பணியாற்றி 1981இல் ஓய்வுபெற்றவர். அவரது மகன் ஷிரந்த குணதிலக, பலாலிக்கு செலுத்திவந்த விமானத்தின் மீது ஏவப்பட்ட 2ஆவது ஏவுகணை காரணமாக விமானம் எரிந்து வீழ்ந்து நொறுங்கியபோது அவரும் பலியானார். இந்த யுத் தத்தில் அவரது மகனின் உயிரைப் பலிகொடுத்த போதிலும் தற்போதைய சமாதான முயற்சிகளை வரவேற்கும் விதத்தில் "சிலுமின" வார இதழுக்கு பேட்டி வழங்கியுள்ளார். அந்தப் பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

**தமிழில்: கஜனி**

*கேள்வி:* 20 வருடங்களாக இடம் பெற்ற யுத்தத்தைத் திரும்பிப் பார்க்கும்போது முன்னாள் விமானப் படைத் தளபதி என்ற வகையில் என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* யுத்தம் உண்மையில் பயங்கரமானது. இது குறித்து இரு வேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. 19 வருடங்கள் 6 மாதங்கள் யுத்தம் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு அரசும் சமாதானப் பேச்சுக்களை மேற்கொண்ட கால கட்டங்களில் மாத்திரம் சுமார் 3 அல்லது 4 மாதங்களுக்கு யுத்த நிறுத்தம் தற்காலிகமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் யுத்தம் மீண்டும் ஆரம்பித்ததுமல்லாமல் தீவிரமாக நடத்தப்பட்டது. இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடந்த டிசெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தமே மிக நீண்ட யுத்த நிறுத்தமாகும். இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள் யுத்தம் தொடர்ந்தபோதிலும் குறிப்பாக எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை என்றே நான் நினைக்கிறேன். விலைமதிப்பற்ற மனித உயிர்களும் பெருமளவிலான சொத்துக்களும் இழக்கப்பட்டுள்ளன. இது தெற்கில் மாத்திரமன்றி வடக்கிற்கும் கிழக்கிற்கும் பொருந்தும். கடந்த டிசெம்பர் மாதத்திற்குப் பின்னரும் யுத்தம் தொடர்ந்திருக்குமேயானால் எத்தனை மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்கும்? எவ்வளவு சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கும்? யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இடம்பெறும் சமூக அழிவுகள் எத்தகையது என்பதை யுத்தம் நிறுத்தப்பட்ட பின்னரே புரிந்துகொள்ளமுடியும். எனவேதான் மீண்டும் யுத்தம் இடம் பெறாவண்ணம் நாம் அனைவரும் செயற்படவேண்டும்.

*கேள்வி:* யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பல சந்தர்ப்பங்களில் சமாதான முயற்சிகள் இடம்பெற்றன. அந்த முயற்சிகள் அனைத்துமே தோல்வியில் முடிவுற்றன. அந்தக் காலகட்டங்களில் நீங்கள் விமானப் படைத் தளபதியாகவும் உயர் அதிகாரியாகவும் பணிபுரிந்துள்ளீர்கள். அந்தச் சமாதான முயற்சிகள் ஏன் தோல்வியுற்றன என்பது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் ஒழுங்குகள், பங்குபற்றும் தரப்பினர், பிரச்சினையைப் புரிந்துகொள்ளுதல் போன்ற பல விடயங்கள் இந்தத் தோல்விகளுக்குக் காரணமாக அமைந்தன. யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னராக பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்கக்கூடிய வேளைகளில் முனைவைக்கப்பட்ட திட்டங்கள், உடன்பாடுகள் ஆகியனகூட குறுகிய இனவாத நோக்கங்களைக் கொண்டிருந்ததால் சமாதான முயற்சிகள் பலனளிக்காமல் போயின. ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் திம்புப் பேச்சுக்களுக்கு அவரது சகோதரனான எச்.டபிள்யூ.ஜயவர்த்தனவே சென்றார். அதன் பின்னர் இலங்கை - இந்திய உடன்பாடு தொடர்பான புதுடெல்லி பேச்சுக்கள், ஜனாதிபதி பிரேமதாஸாவால் மேற்கொள்ளப்பட்ட கொழும்புப் பேச்சுக்கள், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவால் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகள் ஆகியனவே முறிவடைந்த சமாதானப் பேச்சுக்கள் என அண்மைக்கால வரலாற்றில் காணமுடிகிறது. தற்போது நடைபெற்றுவரும் பேச்சுக்கள் முறிவடையாவெனப் பெரும் நம்பிக்கை உள்ளது. காரணம் இதில் மூன்றாம் தரப்பு சம்பந்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களின்போது மூன்றாம் தரப்பு ஈடுபட்டிருந்தால் முன்னேற்றம் காணப்பட்டிருக்கக்கூடும். இரு தரப்பினரும் பேசினர். இரு தரப்பினரும் கருத்து முரண்பாடுகள் காரணமாக உடனே எழுந்து சென்றனர். பேச்சுக்கள் மேற்கொள்ளப்படும் வேளையில் கருத்து முரண்பாடுகள் உருவானால் அவற்றை நேர் சீர் செய்து பேச்சுக்களைத் தொடர்வதற்கு மூன்றாம் தரப்பு அயராது பாடுபட வேண்டும். அதைவிட பேச்சுக்களுக்குப் போவதற்கு முன்னர் இருதரப்பினருக்கும் இடையில் அன்னியோன்ய நம்பிக்கையை உருவாக்கவேண்டும். இம்முறை பேச்சுக்களுக்கு முன்னர் செயல்வடிவில் அந்த நம்பிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது.

*கேள்வி:* நீங்கள் கூறுவதுபோல் அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்குமிடையே நம்பிக்கையை உருவாக்கினால் மட்டும் பேச்சுக்கள் வெற்றிபெறும் என்கிறீர்களா?

*பதில்:* யுத்தத்தில் இந்த இரு தரப்பினரே பங்கேற்றனர். எனவே, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து பேச்சுக்கள்மூலம் தீர்வுக்கு வருவதாயின் இந்த இரு தரப்பினரும் முதலில் உடன்பாட்டிற்கு வரவேண்டும். அந்தப் பேச்சின்போது இரு தரப்பாலும காணப்படும் தீர்வானது நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஏற்புடையதாக அமையாவிடின் நிரந்தர சமாதானம் உருவாக வாய்ப்பில்லை. இரு தரப்பினரும் தத்தமது மக்களின் உரிமைக்காக ஆஜராவதால் பொதுவான கொள்கையின் அடிப்படையில் அவர்களால் உடன்பாட்டிற்கு வர முடியாது. இதைவிடுத்து வேறெந்த உடன்பாட்டிற்குவரினும் அது நிலைத்திருக்கக்கூடிய தீர்வாக அமையாது.

*கேள்வி:* விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு உடன்படுவது, சமாதானப் பேச்சுக்களுக்கு முன்வருவதெல்லாம் அவர்கள் போராற்றலை இழக்கும்போதே எனவும் - அவர்கள் மீண்டும் யுத்தத்திற்குத் தயாராவதற்கான கால அவகாசத்தைப் பெறுவதற்கே எனவும் - சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்தே தென்பகுதியில் ஒரு கருத்து நிலவுகிறது. விடுதலைப் புலிகளின் ஏமாற்று வித்தைக்கு அரசு பலியாகிவிட்டது என மற்றொரு சாரார் குற்றஞ்சாட்டுகின்றனரே?

*பதில்:* இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்கள் முறிவடைந்து மீண்டும் யுத்தம் தொடங்கிய காரணத்தால் சிலர் இந்தச் சந்தேகத்தை எழுப்புகின்றனர். முன்னைய பேச்சுக்கள் முறிவடைந்ததற்கு ஒரு தரப்பினர் மாத்திரம் காரணமல்ல. இன்றைய நிலையில் மீண்டும் யுத்தத்தைத் தொடங்க விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமன்றி அரசுக்கும் இயலாது. மூன்றாம் தரப்பு உள்ளது. முழு உலக சமுதாயமுமே இந்தச் சமாதானப் பேச்சுக்களை அவதானித்துக் கொண்டிருக்கிறது. அதைவிட வடபகுதி மக்களும் தென்பகுதி மக்களும் மீண்டும் யுத்தம் இடம்பெறுவதை அனுமதிக்கமாட்டார்கள். வடபகுதி மக்களும் தென்பகுதி மக்களும் முழுமையாக இல்லாவிடினும் ஓரளவேனும் நியாயமான சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். குறிப்பாக வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை பெரும்பாலும் நீக்கப்பட்டுள்ளது. தினமும் இடம்பெற்ற இராணுவச் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன. 20 வருடங்களாக இழந்திருந்த சுதந்திரத்தை மீண்டும் இழக்க மக்கள் தயாராயில்லை. விடுதலைப் புலிகள் மீண்டும் போராற்றலைப் பெருக்கிக்கொண்டு யுத்தத்தை ஆரம்பித்தால் சர்வதேச சமூகம் எவ்வித மன்னிப்பையும் வழங்காது. ஸ்ரீலங்கா அரசையும் சர்வதேச சமூகம் மன்னிக்காது.

தென்பகுதி மக்கள் யுத்தத்தின் வடிவத்தைத் தற்போதுதான் காணுகின்றனர். விடுதலைப் புலிகள் தென்பகுதியில் மேற்கொண்ட குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றியே அவர்கள் முன்னர் அறிந்திருந்தனர். தற்போது அவர்கள் வடக்கிற்கும் கிழக்கிற்கும் சென்றுவருகின்றனர். அங்கு இடம்பெற்றுள்ள யுத்த அழிவுகளை நேரடியாகக் காணுகின்றனர். வடக்கு - கிழக்கு மக்கள் எத்தகைய கொடுரத்தைச் சந்தித்துள்ளனர் என்பதைத தென்பகுதி மக்கள் உணருகின்றனர். வடக்கு - கிழக்குக்கு மேற்கொள்ளும் பயணங்களின்படி மீண்டும் யுத்தம் ஆரம்பிக்க வாய்ப்பில்லை எனத் தென்பகுதி மக்கள் உணர்வதாக அறிகிறேன். இதனால்தான் முன்னரைப் போல இனவாதிகளுக்கு மக்களைத் தம் பக்கம் இழுக்க முடியாதுள்ளது. தென்பகுதி மக்கள் குறித்து வடக்கு - கிழக்கு மக்கள் கொண்டிருந்த சந்தேகமும் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

*கேள்வி:* யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு யுத்தம் இடம்பெறாத இந்த வேளையில் தென்பகுதி மக்களுக்கு இருக்கும் அளவிற்கு வடபகுதி மக்களுக்குச் சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது. இவ்வாறான நிலைமை ஏன் நிலவுகிறது?

*பதில்:* யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முககிய புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும், யாழ்குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் பலர் தற்போதும் அகதிமுகாம்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களுக்கு - தங்கள் வீடுகளுக்கு செல்ல முடியாதுள்ளனர். சுமார் 28 சதுர கிலோமீற்றர் பரப்பு தற்போதும் அதி உச்ச பாதுகாப்பு வலயமாகப் பேணப்படுகிறது. பருத்தித்துறையில் இரு பாடசாலைகள் தொடர்ந்தும் இராணுவ முகாம்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனாலேயே அண்மையில் மோதல்கள் அங்கு இடம்பெற்றன. கொழும்புப் பத்திரிகைகளில இவை யாவும் மறைக்கப்படுகின்றன. யுத்தம் நிறுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் இன்றோ அல்லது நாளையோ தமது சொந்த வீடுகளுக்குச் செல்லலாம் என அந்த மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பலாலியில் இருந்து தெல்லிப்பழை வரையும் அதிஉச்சப் பாதுகாப்பு வலயம் பரந்துள்ளது. பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்ளாத அளவிற்கு இந்த பாதுகாப்பு வலயம் விஸ்தரிக் கப்பட்டுள்ளது. நிரந்தரத் தீர்வு எட்டப்படும் வரை இந்தப் பாதுகாப்பு வலயத்தை குறுக்கும் நிலைமை இல்லை.

*கேள்வி:* இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கையை உறுதிப்படுத்தினால் மட்டுமே சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடையமுடியும் எனக் கூறுகின்றீர்கள். நீங்கள் குறிப்பிடும் உயர் பாதுகாப்பு வலயத்தைக் குறுக்கமுடியாமல் இருப்பதற்கு காரணம் விடுதலைப் புலிகள் மீது அவநம்பிக்கை கொண்டிருப்பதாலா? அதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவது விடுதலைப்புலிகள் அல்ல. அப்பிரதேசத்தில் வீடுகள் உள்ள மக்கள் அல்லவா?

*பதில்:* உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக உண்மையில் தமிழ் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். இக்காரணத்தாலேயே முதல் சுற்றுப் பேச்சுக்களின் போது இது தொடர்பாக ஆராயக் குழு ஒன்றை நியமிப்பது என முடிவெடுக்கப்பட்டது. பருத்தித்துறைச் சம்பவம் தொடர்பாக நான் மேற்கொண்ட விசாரணை அறிக்கையின்படி ஒரு சில ஏக்கர் நிலம் விவசாயத்திற்காக வடுவிக்கப்பட்டுள்ளது. உடன்பாட்டிற்கு வந்த உடனேயே பாதுகாப்பு வலயத்தைக் குறுக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நினைக்கிறேன்.

*கேள்வி:* வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அடிப்படையாக வழங்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகம் தனிநாட்டைப் பெறுவதற்கான முதல் நடவடிக்கை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறதே?

*பதில்:* திரித்துக் கூறப்படுகிறது என்றே நினைக்கிறேன். விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும் என நாட்டின் ஜனாதிபதிகூட ஏற்றுக்கொண்டுள்ளார். மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் எவை? இடைக்கால நிர்வாக சபைக்குரிய அதிகாரங்கள் எவை? என்பன குறித்தே இனிப் பேசி முடிவு காணப்படவேண்டும். தமிழ் மக்களுக்குத் தனனாட்சி உரிமை வழங்கப்படாவிடின் பிரிந்து செல்லநேரிடும் என கடந்த பேச்சுக்களின்போது அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடத் தெரிவித்துள்ளார். எனவேதான், எப்போதும்போல் கொழும்பிலுள்ள மத்திய அரசே அந்த மாகாணங்களை நிர்வாகம் செய்யப்போகிறதா? என்பது குறித்து தீர்மானிக்கப்படவேண்டும். அவ்வாறு செயற்பட முறபட்டதாலேயே யுத்தம் ஆரம்பித்தது. இப்போதாவது நாம் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். அந்த உரிமையை அந்த மக்களுக்கு வழங்காத காரணத்தாலேயே இரு நாடுகள் என்ற நிலை உருவாகியுள்ளது.



முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக

*கேள்வி:* கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்குத் தனியான நிர்வாக அலகை வழங்குவது மேற்கொள்ளக் கூடாத ஒரு பயங்கரமான பணியா?

*பதில்:* நான் நினைக்கும் விதத்தில் அவ்வாறு வழங்காவிட்டால் பயங்கரமான பிரதிபலன் உருவாகலாம். அந்நிலை ஏற்பட்டால் அந்த மக்கள் மத்திய அரசின் நிர்வாகத்திலிருந்து முற்றாகப் பிரிந்து செல்வர். சிறுபான்மை இனத்தவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுகின்றனவா? என உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படும்போது அவர்கள் நியாயமற்ற விதத்தில் பிரிந்து செல்லமாட்டார்கள். நியாயமான காரணங்களின்றித் தனிநாடு கோரினால் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புக் கிடைக்குமா? தனிநாடு உருவாகுவதற்கு இந்தியா இடமளிக்குமா? எனவே, தனிநாடு கோருவார்கள் எனத் தேவையற்ற அச்சத்தை உருவாக்கிக் கொண்டு அந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நியாயமான உரிமைகளை வழங்காவிடின் ஒருபோதும் இந்நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்கமுடியாது.

*கேள்வி:* விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் இரு வேறு அணிகளே தவிர ஒன்றல்ல எனவும் - இடைக்கால நிர்வாகம் தேவைப்படுவது விடுதலைப் புலிகளுக்கே தவிர தமிழ் மக்களுக்கு அல்ல எனவும் ஒரு கருத்து நிலவுகிறதே?

*பதில்:* இந்தக் கருத்து பெரும்பாலான தமிழ் மக்களிடம் இருந்து உருவாகவில்லை. தென்பகுதியில் இருந்தே உருவாகிறது. தற்போது டாருங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ரி.என்.ஏ. ஆகிய அமைப்புக்கள் விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என ஏற்றுக் கொண்டுள்ளன. ஈ.பி.டி.பி. மாத்திரமே இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஈ.பி.டி.பி. யாழ்ப்பாணத்திலுள்ள சில தீவுகளில் முடங்கியுள்ளது. இது சரியாக தென்பகுதியில் சிஹல உறுமய போலவே ஆகும்.

இன்று வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஏதாவது நிவாரணத்தை அனுபவிக்கிறார்களெனில் அது விடுதலைப் புலிகளால் தென்பகுதி அரசுக்குக் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாகவே பெறப்பட்டன என்பதைப் பெரும்பாலான தமிழ்மக்கள் அறிவர். அவ்வாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டபோது அனுசரிக்கப்பட்ட வழிமுறைகள் சில தென்பகுதி மக்களுக்கு பயங்கரவாத நடவடிக்கைகள் போல் தோன்றினாலும் வடக்கு - கிழக்கு மக்கள் அவற்றை விடுதலைக்கான போராட்டம் என்ற கண்ணோடு பார்க்கின்றனர். எனவேதான் பெரும்பான்மையான தமிழ்மக்கள் தங்களுக்காக விடுதலைப் புலிகள் பல விடயங்களை மேற்கொண்டுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமிழ்மக்களின் விடிவுக்காகப் பாடுபடுவார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?

*பதில்:* அவ்வாறே நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எதிர்காலத்தில் அவர்களையும் நிர்வாகத்தில் சேர்க்கவேண்டும். தங்கள் விடுதலைக்காக ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் உலகில் ஜனநாயக நிர்வாக அமைப்பில் ஈடுபட்டுள்ளனர். நெல்சன் மண்டேலா மற்றும் யஸீர் அரபாத் ஆகியோர் நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு வந்துள்ளனர். எனவே, தேர்தலை நடத்தி அவர்களை (விடுதலைப் புலிகளை) ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ளச்செய்ய வேண்டும்.

*கேள்வி:* நீங்கள் கூறுவதுபோல் விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியலில் கலந்துகொள்ளும் நோக்கில் அரசியல் பணிமனைகளைத் திறந்துள்ளனர். ஆனால், அவர்கள் கொழும்பில் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் தமது அரசியல் பணிமனைகளைத் திறக்க முயற்சித்தபோதிலும் அதற்கு இடமளிக்கப்படவில்லையே?

*பதில்:* துப்பாக்கிகள்மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போரிட்டவர்கள் ஏதோ ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ளவிருப்பது எவ்வளவுதூரம் பெறுமதிமிக்கது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு இடமளிக்க மறுப்பதானது, அவர்களை நோக்கி நீங்கள் துப்பாக்கிகள்மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் எனக் கூறுவதற்கு ஒப்பானதாகும். நாடெங்கும் அரசியல் பணிமனைகளைத் திறந்து தமது அரசியல் கருத்துக்களைப் பிரசாரம் செய்து நாடாளுமன்ற ஜனநாயகத்தில் அவர்கள் பங்குகொள்வதை இந்த நாட்டிலுள்ள அனைவரும் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

*கேள்வி:* யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கும்போது பருத்தித்துறையிலும் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. இத்தகைய மோதல்கள் சமாதான முயற்சிகளை எந்த அளவிற்குப் பாதிக்கும்?

*பதில்:* ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டு பின்னர் சமாதான வழிமுறைகளுக்குள் நுழையும்போது இந்த இடைப்பட்ட காலத்தில் இந்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதேபோன்ற மோதல்கள் வேறு இடங்களிலும் இடம் பெறக்கூடும். இதற்குக் காரணம் இந்த இரு தரப்பினரும் நீண்ட காலமாக யுத்த மனநிலையைக் கொண்டிருந்ததேயாகும். இந்த மனநிலை நீங்க ஓரளவு காலம் எடுக்கும். இந்தச் சம்பவங்கள் முக்கிய நிகழ்வுக்கு இடையூறாக அமையமாட்டாது. அவற்றை அவ்வாறு எடுக்கவும் கூடாது. ஒரு சில இனவாதிகளும் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டவர்களும் சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்க வாய்ப்புகள் உள்ளன. அண்மையில் முக்கிய சம்பவமாகக் கருதப்பட்ட ஆள்கடத்தல் (அம்பாறை) சம்பவம் குறித்து உண்மைத் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. எனவே, இடம்பெறும் சம்பவங்கள் குறித்து மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சிறிய விடயம் மோதலாக மாறினால் அதனால் பயனடையப்போவது இனவாதிகளே. மோதல்கள் குறித்து அரச படைகளும் மிகவும் கவனம் செலுத்தவேண்டும். இரு தரப்பினருக்கும் இடையில் மோதல்களை உருவாக்க ஒருசிலர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்வண்ணமுள்ளனர். யுத்தத்தை வியாபாரமாக ஆக்கியவர்களுக்கு சமாதானம் ஒரு தலையிடியாக அமைந்துள்ளது. ☆

# பளைப் பாடசாலைக்கு தற்காலிக வகுப்பறைகள்

## கல்விப் பேரவை அமைக்கிறது

தென்மராட்சி,நவ.11

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இயக்கச்சி அ.த.க. பாடசாலைக்கு 100 அடி நீளமான தற்காலிக வகுப்பறைத் தொகுதி தமிழீழ கல்விப் பேரவையினால் அமைக்கப்படவுள் ளது.

கடந்த 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இப்பாடசாலை எதிர்வரும் ஜனவரி மாதம் சொந்த இடத்தில் மீள இயங்குவதற்காக வகுப்பறைத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இயக்கச்சிச் சந்தியில் உள்ள இப்பாடசாலைக் கட்டடங்கள் யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-117)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## 11-11-2002

HAPPY BIRTHDAY



## செல்வன் புவனேந்திரராசா பாலமுருகன் (மஞ்சுதன்)

**சந்திரன் கடையடி, உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த**
**திரு.திருமதி புவனேந்திரராசா செல்வலக்சுமி தம்பதிகளின்**
**செல்வப்புதல்வன் செல்வன் பாலமுருகன (மஞ்சுதன்)**

அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (11.11.2002) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அப்பா, அம்மா, அக்காமார் சாரங்கா, கேசிகா, விதுஷா, அம்மம்மா நாகராசா தங்கம்மா, தாத்தா, கனடாவில் வசிக்கும் பாலச்சந்திரன் மாமா, விஷையா மாமி, நிவேதா, அபிசா மச்சாள்மார், ஜேர்மனியில் வசிக்கும் காந்தன் மாமா, மதி மாமி, மச்சான் விதுசன், விபூசனா மச்சாள், பிரான்ஸில் வசிக்கும் மகாலட்சுமி பெரியம்மா, ராகவன் பெரியப்பா, ராஜுகா அக்கா, ராஜ்ஜன் அண்ணா, தூசனா அக்கா, உரும்பிராய் வடக்கில் வசிக்கும் ரவிக்குமார் பெரியப்பா, ஜெயலட்சுமி பெரியம்மா, சுவிஸில் வசிக்கும் மகேந்திரன் மாமா, சுகந்தி மாமி, கௌசிகன் மச்சான், கௌசிகா மச்சாள் அனைவரும் பாலமுருகன், செல்வச் சந்நிதி முருகன் அருளால் நோய்நொடி இல்லாமல் பல்லாண்டு காலம் பல்கலைகளும் கற்று எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
(10493) புவனேந்திரராசா (அப்பா).


# சனசமூக நிலைய புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,நவ.11

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த சாவகச்சேரி உப்புக்கேணி சித்தி விநாயகர் சனசமூக நிலையத் திருத்த வேலைக்கென நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் 50 ஆயிரம் ரூபாவினை பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதேவேளை, சேதமடைந்த சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலய திருத்த வேலைக்கும் 50 ஆயிரம் ரூபாவினை அவர் ஒதுக்கியுள்ளார். (ஒ-117)

# பண்டத்தரிப்பில் தபால் அலுவலக ஆலோசனைக்குழு

சண்டிலிப்பாய்,நவ.11

பண்டத்தரிப்பு தபால் அலுவலக பிரிவுக்கான தபால் அலுவலக மக்கள் ஆலோசனைக் குழுவொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு தபால் அலுவலகப் பிரிவிலும் தபால் அலுவலக சேவையைத் தரம் உயர்த்துவதற்கான மக்களின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் தபால் அலுவலக மக்கள ஆலோசனைக்குழு அமைக்கப் படவேண்டும் என்று தபால் திணைக்களம் அறிவித்துள்ளதை அடுத்து குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. (எ-135)

# 19 மாடுகள் ஏலத்தில் விற்பனை

தென்மராட்சி,நவ.11

மந்துவில் பகுதியில் கட்டாக்காலியாக அலைந்த 19 மாடுகள் பிடிக்கப்பட்டு மீசாலை கமநல சேவை நிலையத்தில் 28ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்துவில் பகுதி விவசாய சம்மேளனத்தினால் பிடிக்கப்பட்ட 23 மாடுகளில் நான்கு மாடுகள் அவற்றின் உரிமையாளரிடம் பிடிபணம் அறவிடப்பட்டு மீள வழங்கப்பட்டன.

குறியில்லாத மாடுகளுக்கு உரிமை கோரப்பட்ட போதும் அவை மீள வழங்கப்படவில்லை. (ஒ-117)

## பொதுமக்கள் பலரைக் காவுகொண்ட

# குருநகர் யாகப்பர் ஆலயம் மீதான குண்டுவீச்சின் 9ஆம்ஆண்டு நினைவுநாள்

## நாளைமறுதினம் விசேட திருப்பலி

குருநகர்,நவ.11

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது விமானக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட 9ஆவது நினைவுநாள் நாளை மறுதினம் 13ஆம்திகதி புதன்கிழமையாகும்.

இத்தாக்குதலை நினைவுபடுத்தும்முகமாகவும், உயிரிழந்த மக்களுக்காகவும் அன்றையதினம் மாலை 5மணிக்கு மேற்படி ஆலயத்தில் விசேட வழிபாடுகள் திருப்பலி என்பன நடைபெறவுள்ளன.

குருநகர் பங்குத்தந்தை வண. பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் தலைமையில் இந்த வழிபாடுகள் நடைபெறவுள்ளன. குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட 'நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆலயத்தை' வண.பிதா ஆர்.எம்.ஜி. நேசநாயகம் அடிகளார் திறந்து வைப்பார். (எ-51)


**Fibre glass boats available ex-stock**

**கல்நார் இழைப்படகு உடன் விற்பனைக்கு உண்டு.**
**விரும்பிய வர்ணங்களில் 4 நாள்களில்**
**செய்து வழங்கப்படும்.**

**STAR INDUSTRIAL SERVICES (PVT) LTD.**

Office: *124, Rasavinthoddam Road, Nallur, Jaffna.*

Boat Yard: *270/6, Nayanmar Veethy, Nayanmarkattu, Jaffna.*

(10490)



## 16ஆவது வருட நினைவஞ்சலி

**மாவீரர் வி.பெ.பஞ்சாட்சரநாதன்**

***(2ஆம் லெப்.பவான்)***

தாயின் மடியில் 01-02-1969 | வீரமரணம் 11.11.1986



**தமிழர் வாழ்வுக்காய்த் தரணியில் உயிர்விட்ட**
**தங்கத் தமிழ் மகனே - நீ மரணிக்கவில்லை!**
**எம்முடன் இப்போதும் வாழ்கின்றாய்.**

*செல்வச்சந்நிதி கோயிலடி,*
*தொண்டமானாறு.*

- அம்மா, அண்ணன்மார், அக்கா, தங்கை.

தகவல்: வி.பெ.சடாச்சரநாதன்.

(10483)



இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிட்டு விட்டார்களா?

குடாநாட்டில் துப்பாக்கிகள் இன்னும் ஓயவில்லை

கொழும்பு - யாழ்.சேவைக்கு போட்டிபோடும் விமான நிறுவனங்களும் பீதியூட்டும் தகவல்களும்

7ஆண்டுகளுக்குப் பின்னர் மாவீரர் தினத்துக்கு தயாராகும் குடாநாடு




உதறித்தள்ளிய வைகோவை அரவணைக்கலாமா கலைஞர்.
தி.மு.கவினர் குழப்பம், ஸ்டாலின், அழகிரி கலக்கம்

தமிழர்கள் சம்பந்தப்பட்ட சட்டம் புலிகளின் சம்மதத்துடன்தான் வரும்
- தேரடி -

நான் ரெடி....
நீங்கள் ரெடியா?
- நகைச்சுவை விருந்து -

வவுனியா பெண் படுகொலை ஏற்படுத்தும் சந்தேகங்கள்


மற்றும் விறுவிறுப்பான அம்சங்கள்

12-11-2002 இதழில்

சுடர் ஒளி

விலை -14/-

(C/24822)




**காலத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு உருக்குத் தளபாட முன்னோடி உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும்**

☆தொழில்நுட்ப வல்லுநர்களின் கைவண்ணத்தில் உருவான உயர்தர உருக்குத் தளபாடங்கள் எமது ஸ்தாபனத்தில் உருவாக்கப்பட்டு விற்பனையாகின்றன.

☆வாடிக்கையாளரின் விருப்பத்துக்கேற்ப அவர்கள் தரும் உருவ அமைப்பின்படி (DISIGN) குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.

☆பாடசாலைகள், கல்வி, கல்விசார் நிறுவனங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

*எமது உற்பத்திப் பொருள்கள்*

❊ STEEL CUPBOARDS
❊ STEEL CABINET *(for office use)*
❊ VARIETIES of TABLES
❊ COMPUTER TABLE *(Wood & steel)*
❊ BOOK SHELVES ❊ FILE RACKS
❊CASH BOX

***Reliable Services & Repairs of***

❊Type Writers ❊Roneo machines
❊Roneo printings
❊Computer stencil cuttings

*Above Services are Done by us*

**E.U.T.**

**249, K.K.S. Rd., Jaffna. (opposite Jaffna Hindu College)**

(10486)



**STAR INDUSTRIAL SERVICES (PVT) LIMITED**

**தொழில் ஸ்தாபன மாற்றம்**

கடந்த 16 வருடங்களாக புரோமோட்டர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிடட் என்னும் கம்பனியில் பிராந்திய இயக்குநராக சகல பணிகளையும் பொறுப்பேற்று நிர்வகித்துவந்த கனகசபை பூரணச்சந்திரன் ஆகிய நான், அக்கம்பனியின் பொறுப்புக்களிலிருந்தும் பிராந்திய இயக்குநர் பதவியிலிருந்தும் விலகி, ஸ்டார் இன்டஸ்ரியல் சேவிஸஸ்(பிரைவேட்) லிமிடட் என்னும் கம்பனியை ஆரம்பித்துள்ளேன். இந்தக் கம்பனியூடாக நான் எனது சேவையைத் தொடர்ந்து செய்து வருகிறேன் என்பதை எல்லோருக்கும் அறியத்தருகின்றேன்.

காரியாலய முகவரி:
*124, இராசாவின்தோட்டம் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொ. பே. இல. 021-222-3088*

க.பூரணச்சந்திரன்
நிர்வாக இயக்குநர்.

(10489)


# மரண அறிவித்தல்

## திருமதி தில்லையம்பலம் பரமேஸ்வரி

*(விளானை, களபூமி, காரைநகர்)*

காரைநகர், விளானையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் பரமேஸ்வரி நேற்று (10.11.2002) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சங்கரப்பிள்ளை - சுந்தரம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் பரமசாமி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, சண்முகம், கந்தையா, பரமேஸ்வரி, செல்வநாயகி ஆகியோரின் மைத்துனியும் நாகம்மாவின் சகலியும் இராசேஸ்வரி, தர்மரத்தினம் (சுவிஸ்), கமலேஸ்வரி, தனராசரத்தினம் (லண்டன்), சண்முகரத்தினம் (கனடா), ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயாரும் மார்க்கண்டு (லண்டன்), காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் கனகாம்பாள் (சுவிஸ்), சாந்தினி (லண்டன்), இராமன் (பொன்னம்பலம் அரிசி ஆலை, பரந்தன்) ஆகியோரின் மாமியாரும் கௌதமி, சுபாஜினி, இன்பராஜ், அனுஷா, தினேஸ், ஜனார்த்தன், மகிந்தீசன், தீபிகா, பிருந்தா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.11.2002) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை, களபூமி,*
*காரைநகர்.*

தகவல்:
தி. தனராசரத்தினம் (மகன்).

(10488)

# ஆறுமுகநாவலர் குருபூசைதினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்.சைவபரிபாலனசபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை சார்பான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 17ஆம், 24ஆம் திகதிகளில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

கட்டுரைப் போட்டி 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகும்.

தரம் 12, 13 வகுப்புக் களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குகொள்வர்.

பேச்சுப் போட்டி 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிககு ஆரம்பமாகும்.

கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டிகளில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றுவர்.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பதக்கம் சூட்டுதல், பரிசில் வழங்கும் நிகழ்வு ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினமான எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என சைவபரிபாலன சபைப் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

(எ)


**வித்து மாணவர் சஞ்சிகை**

★ கராத்தே சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் 11.11.02, 12.11.02 இன்றும் நாளையும் இரு தினங்களும் வழங்கப்படும்.

★ அனுமதி அட்டை பெறாத மாணவர்கள் போட்டியில் பங்கு கொள்ளமுடியாது.

★ 15.11.02 நடைபெறவுள்ள பயிற்சிப் பாசறையில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தங்கள் பெயர்களை அலுவலகத்தில் பதிவுசெய்யவும்.

(10495) - நிர்வாகி


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 421 |
|---|---|
| திகதி | 08.11.2002 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5552184-5565075

வெற்றி இலக்கங்கள்: 40 41 47 51

லக்கினம்: தனுசு



ஜக்பொட் பரிசு
ரூபா. 2,926,850/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,554,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 280,748 | 10 | 2,807,480 |
| 2 இலக்கங்கள் | 25,810 | 20 | 516,200 |
| 1 இல + லக்கினம் | 25,703 | 30 | 771,090 |
| 2 இல + லக்கினம் | 2,320 | 100 | 232,000 |
| 3 இலக்கங்கள் | 680 | 500 | 340,000 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,926,850 | - |
| மொத்தம் | 335,336 | - | 5,421,770 |


மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 5,421,770/-

தொடர் இல. 4568692க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

5558395-1-98
5554367-9-95
5552318-5-52
5553679-6-67
5554591-1-24

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3171581 இருந்து 3188853 வரை
சீட்டிழுப்பு இல. 1348
திகதி 09.11.2002



வெற்றி எண்கள்: 03 09 18 49 52

போனஸ் எண்: 37

ஜக்பொட் பரிசு
ரூபா.5,865,800/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 5,865,800/- | 5,865,800/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 92 | 10,000/- | 920,000/- |
| 3 | 5,554 | 500/- | 2,777,000/- |
| 2 | 90,984 | 20/- | 1,819,680/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 110,500 | 10/- | 1,105,000/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.12,587,480/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 2194078க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 13ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3175105-9-32
3185090-6-57
3178753-5-06
3184900-8-04
3182177-2-48

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# உருளைக்கிழங்கு விளைச்சலை அதிகரிப்பதற்கான வழிவகைகள்

**இது உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கைக்காலம். இந்த வேளையில் உருளைக் கிழங்கு விளைச்சலை அதி கரிப்பதற்கான வழிமுறைகள் பற்றி விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

இந்த ஆண்டு பெரும்போக உருளைக்கிழங்குச் செய்கைக்காக ஹொலண்ட் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட "டிசைறி" இன விதைக் கிழங்கு கமநல அபிவிருத்தித் திணைகளம் மூலமும், தனியார் மூலமும் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப் படுகின்றது. யாழ்.மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள்: அவர்கள் பெற்ற அனுபவத்துடன் விவசாயத் திணைக்களம் வழங்கும் தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்திக் கூடிய விளைவைப் பெற வேண்டும் என்பதே எமது நோக்கம்.



### தொழில்நுட்பங்கள்

*I. நடுகைக் காலம்*

உருளைக்கிழங்கு வெற்றிகரமாகச் செய்கைபண்ணுவதற்கு நிலம் குளிர்ச்சியாக இருத்தல்வேண்டும். அத்தோடு கிழங்கு பருமனடையும் போது இரவுகாலம் குளிராகவும் பகல் வெப்பமாகவும் இருத்தல் அவசியமானதாகும். இப்படியான சுவாத்தியம் யாழ்.மாவட்டத்தில் வழமையாகக் கார்த்திகை மாத நடுப்பகுதியிலிருந்து பங்குனி வரையும் நிலவுவதால், நடுகையை கார்த்திகை மாதம் நடுப்பகுதி முதல் மார்கழி மாத இறுதிவரை மேற கொள்ளலாம்.

இக்கால இடையில் நடுகையைப் பரவலாக மேற்கொள்ளுவதன் மூலமும், பயிரை நன்கு முதிர்ச்சியடைய விட்டு (கிழங்கு நட்டு 3 மாதத்திற்குப் பின்) அறுவடை செய்து அறுவடையின் ஒரு பகுதியை உரிய முறையில் - 3 மாதங்கள் வரை சேமித்து வைத்து விற்பனை செய்வதன்மூலமும் சித்திரை, வைகாசி மாதம் வரை இம்மாவட்டத் தேவையைப் பூர்த்தி செய்யலாம். இந்த முறைகளைப் பின்பற்றும்போது சந்தை விலை கூடுதலாக வீழ்ச்சியடைய மாட்டாது. இதனால், உற்பத்தியாளர்கள் கூடிய நிகர லாபத்தைப் பெற முடியும்.

*II. முளை அரும்பச் செய்தல்*

இப்பொழுது வழங்கப்படுகின்ற விதைக் கிழங்குகளில் முளை அரும்பவில்லை. எனவே, முளை அரும்பச் செய்ய நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். முளை அரும்பாத கிழங்குகளை சிறிய கிழங்குகள் (28-35மி.மீற்றர்), நடுத்தர கிழங்குகள் (35-45 மி.மீற்றர்), பெரிய கிழங்குகள் (45-55மி.மீற்றர்) ஆகத் தரம்பிரித்து அவைகளை வெவ்வேறாகக் காற்றோட்டமுள்ள, வெயில் பிடிக்காத, ஓரளவு வெளிச்சம் பிடிக்கக்கூடிய அறையுள் மணலைப் பரப்பி அதற்கு மேல் ஒரு படையாக கிழங்குகளைப் பரவிவிடவும்.

தனிமுளை நெடுத்து வளர்ந்து இருந்தால் அம்முளையை உடைத்து விடவும். உடைத்து இரு கிழமைகளில் புது முளைகள் அரும்பும் விதைக் கிழங்கு ஒவ்வொன்றிலும் 1/2 அங்குல வளர்ச்சியுடைய திடகாத்திரமான 2-6 முளை அரும்புகள் இருத்தல் வேண்டும். 4 - 6 முளை அரும்புகள் இருந்தால் கூடிய விளைச்சல் பெறலாம். முளை அரும்புகள் இல்லாத கிழங்கை நடும்போது முளைப்பதற்கு நாட்செல்வதுடன் தொடர்ந்து மழை பெய்யுமாயின் நடப்பட்ட கிழங்குகள் அழுகவும் ஆரம்பிக்கும் எனவே முளை அரும்பிய கிழங்குகளையே நடுகைக்குப் பாவித்தல் முக்கியமானதாகும்.

*III. தரை தயாரித்தலும் நடுகையும்:*

அ. 1000 கன்றுத் தரைக்கு 3 - 4 மெற்றிக் தொன் நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு பரவி தரையை நன்கு பண்படுத்தவும்.

**ச.சின்னத்துரை**
**உதவி விவசாயப் பணிப்பாளர்**
**(விரிவாக்கம்),**
**யாழ்ப்பாணம்.**

ஆ. பெருவாய்க்கால், கைவாய்க்கால்களை அமைத்த பின்பு 2 அடி இடைவெளியில் 4 அங்குல ஆழமுள்ள சால்களை அமைக்கவும்.

இ. 1000 கன்றுத் தரைக்கு அடிகட்டுப் பசளையாக யூரியா - 16.5 கி.கி., அடர் சுப்பர் பொஸ்பேற் - 30 கி.கி., மியூறியேற் ஒவ் பொற்றாஸ் - 12.5 கி.கி. ஆகியவற்றை நன்றாகக் கலந்து சால்களுக்குள் சமனாக இடவும். அல்லது உருளைக் கிழங்குக் கலவை உரத்தில் 75 கி.கி. மேற்குறிப்பிட்டவாறு இடவும்.

ஈ. உரப்பசளைக்கு மேல் முளை அரும்பிய நடுகைக் கிழங்கு நேரடியாக முட்டாமலிருப்பதற்காக பசளைக்கு மேல் ஒரு படை மண் அல்லது நன்கு உக்கிய மாட்டெரு/கூட்டெரு இடவும்.

உ. தரம் பிரித்த முளை அரும்புகள் உள்ள சிறிய கிழங்குகளை 10 - 12 அங்குல இடைவெளிகளிலும, நடுத்தர கிழங்குகளை 15 - 18 அங்குல இடைவெளிகளிலும், பெரிய கிழங்குகளை 20-24 அங்குல இடைவெளிகளிலும் தயார் செய்யப்பட்ட சால்களில் முளை அரும்புகள் மேல் பக்கம் இருக்கக்கூடியவாறு வைக்கவும்.

ஊ. சாலில் குறிப்பிட்ட இடைவெளிகளில் கிண்டி, கிழங்கின் மேல் 1-1 1/2 அங்குல மண் இருக்கத்தக்கவாறு தாழ்க்கவும் அல்லது சாலுக்கருகில் உள்ள மண்ணை எடுத்து சாலை மூடி சாய்வான புருவம்போல் அமைக்கவும்.

எ. தரையின் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளவும்.

ஏ. நாட்டி 15 - 20 நாள் பருவத்தில் களை அகற்றி இலேசாக மண் அணைக்கவும்.

ஐ. நாட்டி 30 - 35 நாள் பருவத்தில் இரண்டாம் முறைகளை அகற்றி சிறந்த முறையில் மண் அணைக்கவும்.

ஒ. இரண்டாம் முறை மண் அணைத்து நீர் இறைக்க ஆரம்பிக்கும்போது யூரியா - 16.5 கி.கி. மியூறியேற் ஒவ் பொட்டாஸ் - 12.5 கி.கி. பசளைகளை நன்றாகக் கலந்து மேற கட்டு பசளையாக இடவும்.

*IV. பீடை, நோய் முகாமைத்துவம்:*

**அ. பூச்சித்தாக்கங்கள்**

1. பணிப்பூச்சி: இச்சிறிய பூச்சி இளம் தளிர் இலைகளின் நுனிகள், ஓரங்களில் இருந்து சாற்றை உறிஞ்சுவதனால், இலைகள் மேல் நோக்கி சுருண்டு கருகும் இதைக் கட்டுப்படுதது வதற்கு லெபசிட் மருந்தை 01 அவுன்ஸ் 03 கலன் நீர் என்னும் வீதத்தில் கலந்து விசிறவும்.

2. அழுக்கணவன்: இப்பூச்சிகள் இளம் தண்டுகளைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாக இருந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதனால், அவை வாடி இறக்கும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு டைமீதோயேற் மருந்தை ஒரு அவுன்ஸ் மருந்து 3 கலன் நீர் என்னும் வீதத்தில் கலந்து விசிறவும்.

3. சிற்றுண்ணி: இவை இலையின் கீழ்ப்புறத்தில் இருந்து சாற்றை உறிஞ்சுவதனால் இலைகள் மஞ்சள் நிறமடைந்து கருகும். வெப்பமான காலங்களில் இதன் தாக்கம் அதிகரிக்கும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சல்பர் மருந்தை 11/2 அவுன்ஸ் 3 கலன் நீர் என்னும் வீதத்தில் கலந்து, இலைகளின் கீழ்ப்புறம் நன்றாக நனையும்படி விசிறவும்.

**கமழும் புலமும்**

4. இலைச்சுருங்கமறுப்பி: இதன் தாக்கம் இலைகளில் வெள்ளைக்கோடு போல் தோன்றும். தாக்கம் அதிகரிக்கும்போது இலைகள் வெளிறும். இதைக் கட்டுப்படுத்துவதற்கு டிப்ரெக்ஸ் மருந்து ஒரு அவுன்ஸ் 3 கலன் நீர் என்னும் வீதத்தில் கலந்து விசிறவும்.

**ஆ. நோய்த்தாக்கங்கள்**

1. முன்கூற்று, பின்கூற்று வெளிறல்: ஈரலிப்பு அதிகமான காலங்களில் இலைகளில் கபில நிறப் புள்ளிகள் அல்லது அடையாளங்களாக இத்தாக்கம் தோன்றும். சாதகமான காலநிலையில் தாக்கம் கூடுதலாகப் பரவும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு டக்கோனில் அல்லது அந்திறக்கோல் மருந்தை ஒரு அவுன்ஸ் 21/2 கலன் நர் என்னும் வீதத்தில் கலந்து விசிறவும்.

2. காறை அழுகல்: நில மட்டத்தில் உள்ள தண்டுப் பகுதியில் இந்நோய் தாக்கும் தாக்கப்பட்ட பகுதி படிப்படியாகக் கருகி இறந்துபோவதால் இலைகள் மஞ்சள் நிறமடைந்து தாவரம் இறக்கும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு முதலில் தாக்கப்பட்ட பயிர்களை அப்புறப்படுத்தி எரித்து விடவேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட நிலையத்திற்கும், அதனைச் சுற்றியுள்ள பயிர் அடிகளுக்கும் டோமோசோல்போட்டி மருந்தை 20 கிராம் 10 லீற்றர் நீர் என்னும் வீதத்தில் கலந்து விசிறவும்.

*V. அறுவடை*

"டிசைறி" வர்க்கம் 3-31/2 மாத வயதுடையது. பயிர் முதிர்ச்சி அடையும் போது இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். தோட்டத்தில் இடைக்கிடை சிறிது கிழங்குகளைப் பிடுங்கி அவற்றின் தோலை பெருவிரலினால் தேய்க்கும்போது தோல் இலகுவாகக கழன்று வருமானால் கிழங்கு முற்றாக முதிர்ச்சியடையவில்லை என்பதைக் குறிக்கும். தோல் இலகுவில் அகற்றப்படாது போனால் கிழங்குகள நன்றாக முதிர்ச்சி அடைந்துவிட்டதாகக் கருதலாம். நன்கு முற்றிய கிழங்குகளை அறுவடை செய்யும் போது கூடிய விளைச்சலைப் பெறலாம்.

*குறிப்பு:* மேலதிக விளக்கங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம். ☆

# கல்விச்சாலைக் காட்சிகள்




உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமெரிக்க நாட்டைச் சேர்ந்த செல்வி கிறேஸ் பங்கருக்கு ஆரம்பப் பிரிவு மாணவி ஒருவர் கராம்பு மாலை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் ஆரம்பப் பிரிவு மேற்பார்வையாளர் திருமதி கலா மகேந்திரகுமார், உடுவில் போதகர் வண.தேவகுணானந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நீண்டகாலம் ஆசிரியராகவும் பதிலதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற திருமதி ஸ்ரீரங்கநாயகி பவானந்தனுக்கும் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற திருமதி அன்னலட்சுமி சீவரத்தினத்துக்கும் குறித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் எடுத்த படங்கள் இவை.

பழைய மாணவி திருமதி பத்மலோசனி சந்திரன், திருமதி ஸ்ரீரங்கநாயகி பவானந்தனுக்கும், திருமதி புஷ்பலீலா ஜெயதீஸ்வரன் திருமதி அன்னலட்சுமி சீவரத்தினத்துக்கும் பொற்பதக்கம் சூட்டி கௌரவிக்கின்றார்கள். உப அதிபர் திருமதி ம.திருநாவுக்கரசு திருமதி அன்னலட்சுமிக்கு மலர்மாலை சூட்டுகிறார். (ஐ)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி தர்சிகா சந்திரயோகன், மாணவ தலைவி செல்வி அனிதா பாலசுப்பிரமணியம் ஆகியோர் மரக்கன்று ஒன்றை நாட்டுவதைப் படத்தில் காணலாம். (எ-173)



சுன்னாகம், கோட்டைக்காடு அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற வாணி விழாவில் மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வைப் படத்தில் காணலாம். (எ)

# எமது பிரதேசத்தைக் கட்டி எழுப்புவது சகல தரப்பினர்களினதும் கடமை

## அரச அதிபர் பத்மநாதன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.11

தற்போது நாட்டில் நிலவும் சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது அனைத்துத் தரப்பினர்களினதும் முக்கிய கடமையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

நேற்றுக்காலை 10மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் வடமாகாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.



இலங்கைத் தேசிய நிர்மாண சங்கத்தின் வடமாகாண இணைத்த தலைவர் கே.சி.சுவர்ணராஜ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அரச அதிபர் செ.பத்மநாதன் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற தொடர்ச்சியான யுத்தத்தினால் எமது மக்கள் அபிவிருத்தியில் அக்கறை செலுத்தவில்லை.

தற்போது ஏற்பட்டிருக்கும் அமைதியான சூழ்நிலையில் அழிந்திருக்கும் எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்புகின்ற பொறுப்பு எல்லோருக்கும் இருககின்றது.

அரச உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், சிந்தனைச் சிற்பிகள், போராளிகள் அனைவரும் இணைந்து எமது பிரதேசத்தை நிர்மாணிப்பதற்கு தங்களாலான பங்களிப்புகளை வழங்க வேண்டும்.

தற்போதைய அமைதிச்சூழலில் கட்டடம், வீதி, நீர்வழங்கல் போன்ற வேலைத்திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

எதிர்காலத்தில் அரசிடமிருந்தோ அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ எமது மக்களுக்கு வரும் நிதியை அவர்களுக்கு உரியவகையில் கிடைக்கச் செய்வது அவசியமானதாகும்.

மக்கள் மிகவும் எதிர்பார்ப்புகளுடன் இருக்கின்றார்கள். அவர்களது எதிர்பார்ப்புக்களை உரியமுறையில் நிறைவேற்ற வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரினதும் கடைமையாகும் என்கிறார் அரச அதிபர்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர் இளஞ்சேரன் உரையாற்றும் போது கூறியதாவது:-

அபிவிருத்தி என்பது எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டிய விடயம். கடந்த காலங்களில் எமது மக்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தார்கள். அப்போது அபிவிருத்திப் பணிகளில் எவரும் ஈடுபட முடியாத நிலை இருந்தது. பாதுகாப்புக் காரணங்களுககாக எதுவுமே செய்யமுடியாத நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

இபபொழுது ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் துரிதமாகச் செயற்படவேண்டிய கடமையும் பொறுப்பும் அனைவருக்குமே உண்டு. சகல தரப்பினரும் போட்டி மனப்பான்மையுடன் செயலாறுவதை விட தேவை அடிப்படையில் வேலை செய்ய வேண்டும்.

நலிவுற்ற இடங்களில் உள்ள வேலைகளை மேய்படுத்த எமது ஒத்துழைப்பு என்றைக்குமே இருக்கும் - என்றார் இளஞ்சேரன்.

இலங்கைத் தேசிய நிர்மாண சங்கத்தின் தலைவர் டி.விஜியரட்ணம், ஓய்வுபெற்ற பொறியியலாளர் என்தேவராஜன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஐ-4)

## ஆயர்கள் நினைவாக இன்று திருப்பலி

குருநகர்,நவ.11

இறந்த ஆயர்கள், குருக்கள் நினைவாக இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.(எ-51)


1 முதல் 10/L வரை தரம்

இன்று முதல்

சுந்தர் வெளியீடு

844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

மூன்றாம் தவணைப் பரீட்சை பயிற்சி வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம்

**இயந்திர மேற்பார்வையாளர் (பயிலுநர்) தேவை**

**(Trainee Printing Supervisor)**

- யாழ்நகரிலிருந்து மூன்று மைல் சுற்றாடலில் இருக்கவேண்டும்.
- பட்டதாரிகள் மட்டும்.
- வேலை முறைமாற்ற (Shipt) அடிப்படை.

இன்று (11.11.2002) மு.ப. 11.00 மணிக்கு நேரில் சமுகந்தரவும்.

உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/24820)

**புதுக்கடைத் திறப்புவிழா**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் 25 ஆம் நாள் இன்று (11.11.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில்

**நியூ பிரியங்கா நகை மாளிகை**

என்னும் நகை மாளிகை வைபவ ரீதியாக எம்மால் ஆரம்பித்து நடத்த இருப்பதனால் வாடிக்கையாளர்கள், அன்பர்கள் வருகை தந்து எமக்கு ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*முக்கிய அறிவிப்பு:*

இதுவரை 177A கஸ்தூரியார் வீதியில் இயங்கிய எமது ஸ்தாபனம் கீழ்க்காணும் முகவரியில் இடம்மாற்றப்பட்டுள்ளது.

*இல. 2G, ஸ்ரான்லி றோட்*
*(பெற்றோல் செற் வடக்குப் புறம்),*
*யாழ்ப்பாணம்.*

தங்கள் நல்வரவை நாடும்:
சு.கந்தஞானி

**விற்பனைப் பிரதிநிதிக்கான வேலை வாய்ப்பு**

வெளிநாட்டிலிருந்து சைக்கிள் இறக்குமதி செய்யும் கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனம், யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் தனது விற்பனையை ஊக்குவிப்பதற்காக விற்பனைப் பிரதிநிதி ஒருவரைத் தேர்ந்தெடுக்க உள்ளது. கீழ்க்குறிப்பிட்டுள்ளவற்றைக் கவனத்தில் கொள்ளவும்.

1) வயது எல்லை 25 - 40 வருடங்கள்.
2) G.C.E. (A/L) 3 பாடங்களில் சித்தி.
3) ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் கூடிய ஆற்றல்.
4) மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம்.
5) தகைமை உள்ளவர்களிடம் இருந்து தகைமைகாண் சான்றிதழ்கள்.
6) நேர் காணலின் போது சம்பளம் பேசி முடிவெடுக்கப்படும்.
7) மோட்டார் சைக்கிள், அதற்கான எரிபொருள் கடமையின்போது தரப்படும்.
8) விற்பனையில் காட்டும் ஊக்கத்திற்கு ஏற்ப விற்பனைக் கமிஷன் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.
9) விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல்வேண்டும்.
10) விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
FAIZAL HARDWARE STORES,
NO.74, DAM STREET,
COLOMBO - 12.
11) விண்ணப்ப முடிவு திகதி: 30.12.2002.
12) கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "விற்பனைப் பிரதநிதிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
13) நேர் காணலுக்கான திகதி கடிதம் மூலம் அறியத்தரப்படும்.
14) நேர் காணல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

(10479)

**எமது புதிய வெளியீடு**

அஜித்தின்
☆ வில்லன்
சிலம்பரசனின்
☆ காதல் அழிவதில்லை
உடன் பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்
வீடியோ சிந்து
உரும்பிராய் சந்தி
(C/24828)

நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு
☆ காதல் அழிவதில்லை.
☆ ஆண்டிப் பட்டி அரசன் பட்டி
ITN பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம். (C-24821)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்...
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத்
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த
வில்லன் (ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30
விசேட காட்சி: 9.30 (புதிய நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
குணால், மனோஜ், அனிதா, நம்பியார் நடித்த
வருஷமெல்லாம் வசந்தம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 6.30 (புதிய நேரம்.)


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் துரைராஜா

(ஓய்வுபெற்ற மருந்துக்களஞ்சியப் பொறுப்பாளர், சுகாதாரத்திணைக்களம்)

காரைநகர், மடத்துக்கரையைச் சேர்ந்த ஆறுமுகம் துரைராஜா நேற்று (10.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-மீனாட்சி ஆகியோரின் அன்பு மருமகனும், தங்கமுத்துவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக்கணவரும், யோகேந்திரன், மோகனரங்கன் (பல்கலைக் கழக மாணவன்), சிறீரங்கன் (செம்பா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் கனகசபை காலஞ்சென்றவர்களான அருளானநதம், உமாதேவி, வேதமங்கை ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, நாகம்மா மற்றும் தவமலர், கனகரட்ணம், காலஞ்சென்ற சிவராசசிங்கம் மற்றும் ஜெகசோதி (கனடா), அன்னமுத்து, சிவபாக்கியம், காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் கணபதிப்பிள்ளை, கந்தசாமி, கனகரட்ணம், ரஞ்சிதசோதி (கனடா) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிதம்பராமூர்த்தி கேணியடி,*
*மல்லிகை புதுறோட்,*
*காரைநகர்.*

தகவல்:-
**மனைவி, பிள்ளைகள்.**
**ஆ.கனகசபை** (சகோதரன்)

(10505)

## திருமதி வைரமுத்து இளையபிள்ளை

காரைநகர், வலந்தலையைச் சேர்ந்த திருமதி வைரமுத்து இளையபிள்ளை நேற்று (10.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும் இரட்டாய் (இளைப்பாறிய கணித ஆசிரியர்), விநாசித்தம்பி (ஆசிரியர், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), தெய்வானை, அஞ்சனாதேவி (ஆசிரியை, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. - காரைநகர்), குமாரவேலு (கணக்காளர், சந்திரானந்த லிமிட்டேட்,கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லைமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வலந்தலை,*
*காரைநகர்.*

தகவல்:
**வை.விநாசித்தம்பி**
(மகன்)

(10507)

## திருமதி நாகேஸ்வரி சண்முகராசா

யாழ்.ஆனைப்பந்தியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாகேஸ்வரி சண்முகராசா 7.11.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினசபாபதி சண்முகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோபாலசாமி - ஈஸ்வரம் தம்பதிகளின் அன்பு மகளும் மற்றும் கதிரமலை, இராஜேஸ்வரி, சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வனிதா (பிரான்ஸ்), தயாநிதி, தயாளினி, தக்ஷினி, இராஜகோபால் (பிரான்ஸ்), கஜமுகன், மதுசூதனன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சியாமாசுந்தர் (பிரான்ஸ்), ஜானகிராமன், சௌந்தரசிங் (வத்தளை), வீரசேகரம் (கொழும்பு), ஜெய்மதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2002) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*303, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
இ.சண்முகராசா
(கணவர்-ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ். பொதுசன நூலகம்.)

(10499)

## இராஜகோபால் இராஜபாலன் சிவசங்கரநாதன்

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜபாலன் சிவசங்கரநாதன் நேற்று (10.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் இராஜகோபால் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் சிவசோதி, காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் சாரதா, ஞானசோதி, நவரசதேவி (தேவி), சிவபாலன் (இந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2002) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு (பழையநேரம்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*46, செட்டித்தெரு,*
*நல்லூர்.*

தகவல்:
திருமதி நவரசதேவி நடராஜா
(தேவி - சகோதரி)

(10500)

## பொன்னம்பலம் நடராசா

(நடேசு மாமா)

பூநகரி, செல்லையா தீவைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை சுவாமியார் வீதியை வதிவிடமாகவும் தற்காலிகமாக வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா அவர்கள் நேற்று (10.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னு தம்பதிகளின் அன்பு மகனும், ஞானபூரணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னலக்சுமி (பேபி) மற்றும் சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவநாதன் (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமாரி (கனடா), சதானந்தசிவம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிந்திகா, பிரம்மியா, ராஸ்மி, நிரோஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, விஜயரட்ணம், இரத்தினபூபதி, இராசநாயகம் மற்றும் செல்வநாயகம் (ஓவசியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (11.11.2002) பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாதாள வைரவர் ஒழுங்கை,*
*வடலியடைப்பு.*

தகவல்:
**ந.சிவநாதன்**
(மகன்)

(10501)

# கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழு பிரதிநிதிகள் இன்று யாழ்.வருகின்றனர்

அரியாலை,நவ.11

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர் ஆணைக் குழுவின் செயலாளர் தலைமையிலான குழு ஒன்று இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

கடந்த பல ஆண்டுகளின் பின்னர் மேற்படி ஆணைக்குழுவின் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகை தருவது இதுவே முதற்றடவையாகும்.

குடாநாட்டில் உள்ள அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இரண்டாம் படிச் சங்கங்கள் போன்றவற்றின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோரை இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## குடாநாட்டிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தில் உலோகப் பொருள்களைத் தயாரிக்கும் வணிகர்களிடமிருந்து பெறுமதி வாய்ந்த பித்தளை மற்றும் வெண்கலத்தினால் தயாரிக்கப்பட்ட அரும் பெருள்கள் விலைக்கு வாங்கப்பட்டு தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன என்பதும் அறியவந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

ஏ-9 வீதியூடாக வாகனங்களில் இத்தகைய பொருள்களை எடுத்துச் செல்வதை விடுதலைப் புலிகள் தடை செய்திருக்கின்றனர். வாகனங்களில் இத்தகைய பொருள்கள் இருக்கின்றனவா என்று சோதனையிடப்படுகிறது. இத்தகைய சோதனை நடவடிக்கைகளில் சிக்காமல் இருப்பதற்காக அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் வாகனங்களில் அரும்பொருள்களைத் தெற்கே கடத்தும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுவருவதாகத் தெரிய வந்திருக்கிறது. (ஐ)

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவரது சடலம் மரணவிசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக அங்கு வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை நடத்தும் அதிகாரி விடுமுறையில் சென்றிருந்ததால் நேற்று சடலத்தின் பிரேத பரிசோதனை நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னும் வீட்டில் இருந்த எவரும் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நடைபெற்ற பொழுது டாக்டர் சமரசிங்க வீட்டில் இருக்கவில்லை. அவர் வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருந்தார். அவரது மனைவியும் மகளும் வேலைக்காரப் பெண்ணுமே வீட்டில் இருந்திருக்கின்றனர்.

வீட்டின் முற்றத்தில் யாரோ கைக்குண்டை எறிந்துவிட்டு சென்றிருக்கின்றனர் என்று கறுவாக்காடு பொலீஸார் தெரிவித்தனர்.

இது குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சீனக்குடாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கும் வலைகள் வீசுவதற்கும் விமானப்படையினரால் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அத்தடை தளர்த்தப்பட்டுள்ளது. மீன் பிடிப்பதற்கான எல்லையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரவு நேரங்களில் மீன்பிடிப்பதற்கும் வலை வீசுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## மேஜர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் குணவர்த்தனவுக்கு சேவை நீடிப்பு வழங்குமாறு சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் சேவை நீடிப்பு வழங்குவதா இல்லையா என்பதை முப்படைகளின் பிரதானியான ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்.

சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து ஓய்வில் செல்லவிருந்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு ஜனாதிபதி சந்திரிகா 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை சேவை நீடிப்பு வழங்கியிருக்கிறார். (ஐ)

# நான்கு இடங்களில் இரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் இந்தக் கூட்டங்களை நடத்துவர்.

இதன்படி கூட்டங்கள் நடைபெற இருக்கும் இடங்கள் மற்றும் திகதிகள் வருமாறு:-

★ 16ஆம் திகதி: யாழ்.மாவட்டம் - தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில்.

★ 18ஆம் திகதி: வவுனியா மாவட்டம் - ஓமந்தை இராணுவ சூனியப்பிரதேசத்தில்.

★ 20ஆம் திகதி: மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவில்.

★ 21ஆம் திகதி: திருகோணமலைமாவட்டம் - இந்தக்கூட்டத்தை சம்பூரில் நடத்தும்படி புலிகள் கோரினர். திருமலை நகரில் போர்நிறுத்தக கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் கூட்டத்தை நடத்த இராணுவத்தரப்பு விரும்பியது. திருமலை நகரில் கூட்டத்தை நடத்துவதாயின் தங்கள் தளபதிகள், மெய்ப்பாதுகாவலர்களுடன் நகருக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தினர். இடம் குறித்து ஆராய்ந்து, பின்னர் முடிவெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

★ 23ஆம் திகதி: அம்பாறை மாவட்டம் - அக்கரைப்பற்று பிரதேச செயலர் அலுவலகத்தில்.

நாளைமறுதினம் முகமாலையில் நடைபெறும் கூட்டம் கடற்புலிகள் சம்பந்தமானதாக இருக்கும். புலிகளின் பிரதிநிதிகள் கேணல் தீபன் மற்றும் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றுவர். இந்தக்கூட்டத்திலேயே மீன்பிடிக் கட்டுப்பாடு மேலும் தளர்த்தப்படுவது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும்.

பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மீள்குடியமர்வு சம்பந்தமான உப குழுவின் கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது. அரச பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் காலை 9.50 மணியளவில் இரு ஹெலிகொப்டர்களில் ஓமந்தையை வந்தடைந்தனர். அரச பிரதிநிதிகளுடன் நோர்வேத் தூதரக அதிகாரிகளும் வந்திருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ அரசாங்கக் குழுவுக்குத் தலைமை தாங்கினார். மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பிரிகேடியர் எஸ்.பி.பாலசூரிய, ரியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர, அதிரடிப் படைத் தளபதி நிமால் லியூகே, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மஜீத் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் இக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் கூட்டத்துக்கு வரவில்லை.

விடுதலைப் புலிகளின் குழுவுக்கு கேணல் கருணா தலைமை வகித்தார். அக் குழுவில் கேணல்களான ஜெயம், தீபன், பதுமன், மாவட்ட அரசியல் பொறுப்பாளர்களான எழிலன், திலக், கௌசல்யன், இளம்பரிதி, சுதாமாஸ்டர், புலித்தேவன், பூவண்ணன், கடற்புலிகளின் தளபதி லெப்டினன்ட் கேணல் செழியன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட் போர்க் தலைமையில் மூன்று தூதரக அதிகாரிகளும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் தலைமையில் நான்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 35 வீதமான பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதையும் அங்கு பாரம்பரியமாக வசித்து வந்த மக்கள் குடியமர முடியாமல் துரத்தப்பட்டிருப்பதையும் புலிகளின் தளபதி கேணல் தீபன் வரைபடங்களின் உதவியுடன் இக் கூட்டத்தில் விளக்கினார். யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதியும் இது குறித்து விளக்கமளித்தார்.

பாதுகாப்பு வலயங்களைச் சுருக்கி, மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான வாய்ப்புகள், மக்களின் வாழ்க்கை நிலையை வழமைக்குக் கொண்டு வரும் முன்னேற்பாடுகள் ஆகியவை குறித்து மாவட்ட ரீதியில் ஆராய்ந்த பின்னர் உப குழுவின் கூட்டத்தில் விரிவாக அவற்றைப் பரிசீலித்து முடிவுகளை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

உப குழுவின் அடுத்த கூட்டத்தை டிசெம்பர் 18 ஆம் திகதி ஓமந்தையில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. எனினும், நோர்வேயில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் போக்குக்கு அமைய இத்திகதியை தேவையானால் மாற்றலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)


## அம்பாள் ரவல்ஸ்




- பலாலி விமான நிலையத்திற்கு 1200/-
- அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு விசேட சலுகைக் கட்டணம்
- A/C, Non A/C வாகனத்துக்கு

(10504)

அம்பாள் ரவல்ஸ்
கம்பஸ் லேன் (மக்கள் வங்கிக்கு அருகில்)
திருநெல்வேலி.
222 2742, 0777-518319



## பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 2002.12.01 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

(C/24827) உப செயலாளர்



## ஒருசில தினங்களில்

O/L English

முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்

சகல புத்தகசாலைகளிலும்

(10506)



## புதிய வீடியோ CD வெளியீடு

சிலம்பரசனின்
★ காதல் அழிவதில்லை
பாண்டியராஜனின்
★ ஆண்டிப்பட்டி அரசம்பட்டி
★வில்லன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம் (C/24824)



## எமது புதிய வீடியோ CD வெளியீடு

விஜயகாந், சிம்ரன் நடித்த அதிரடிச்சித்திரம்
✪ ரமணா
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
✪ வில்லன்
(நண்பகலுக்குப்பின் பிரதிகள் பெறலாம்.)

ITN பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி.

(C/24826)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 - 02 - 1959



உதிர்வு 12 - 10 - 2002

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து எம்மைத் தாய்போல் அரவணைத்து தந்தைபோல்ஆதரித்த தயாளகுணங்கொண்ட சகோதரன்

### கந்தையா சண்முகராஜா (சண்)

திதி:- 11.11.2002

அவர்கள் காலமாகியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். இன்று அவரது 31ஆம் நாளில் அன்னாரை நினைந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து இறைவனை வணங்குகின்றோம்.

- குடும்பத்தினர்.

இல.10, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:- K.தேவராசா

(10471)



## மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்

மேற்படி சங்கத்தின் நிர்வாகத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் (15.11.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கப்பணிமனையில் நடைபெற உள்ளதால் சகல சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகந்தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

மு.கு: மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர், பிரதேச மீன்பிடி பரிசோதகர், கடற்புலிகளின் அரசியல்துறை சார்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ளனர்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(10482)

சங்கநிர்வாகம்.



## எல்லா நீர்க்குழாய் வினைஞருக்குமான அழைப்பு

"ஆம்" எனின்

உங்கள் தேர்ச்சியினை உயர்த்திக் கொள்வதற்கு இதுவே சந்தர்ப்பம். எஸ்-லோன் லங்கா (பிரைவேட்) லிமிடட் நிறுவனம்

தேசிய பயிலுநர் கைத்தொழில்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து

நீர்க்குழாய் வினைஞர்கள் தமது நீர்க்குழாய்த் தொழிற்தேர்ச்சியை உயர்த்திக்கொள்வதற்காக

### ஒரு நாள் தேர்ச்சி உயர்த்துகை செயலமர்வினை

யாழ்ப்பாணம், இல.37, கண்டி வீதி, பஸ்டியன் ஹோட்டலில்

2002 நவம்பர் 12ஆம் திகதி செவ்வாயன்று காலை 8.00 மணிக்கு நடத்துகிறது.

மேலதிக விவரங்களுக்கு: திரு.V.தியாகராஜா

எஸ்-லோன் யாழ்ப்பாண விநியோக நிலையம், இல.287, ஸ்ரான்லி வீதி.

மேற்படி பயிற்சிப் பட்டறைக்கு வரவிரும்புவோர் முன்கூட்டியே தமது பெயர்களை

ஜெசீபா ஏஜன்சி இல.287, ஸ்ரான்லி வீதியில்

பதிவுசெய்து அனுமதி அட்டையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

T.P.: 021-222 2653

(C-24818)

S-lon


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.